Registered as a Newspaper
விலை ரூ. 50 பக்கங்கள் 12
# உதயன்
சுடர் : 38
கதிர் : 121
திங்கட்கிழமை 27 மார்ச் 2023
பங்குனி 13 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## வரி விதிப்பு மறு ஆய்வு

ஐ.எம்.எப். பிரதிநிதிகள் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 27
இலங்கையுடனான பணியாளர் மட்ட ஒப் »11

வவுனியா வெடுக்குநாறிமலை

# ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் அடியோடு அழிக்கப்பட்டது

## ஜீப்பில் அழைத்துவரப்பட்ட காடையர்களின் அட்டகாசம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

வடக்கு மாகாணத்தின் எல்லை கிராமமான வவுனியா – நெடுங்கேணி வெடுக்குநாறி மலையிலிருந்த ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் உருத்தெரியாமல் அடித்து உடைத்து சிதைக்கப்பட்டுள்ளது. சிவலிங்கம் பெயர்த்து எடுக்கப்பட்டு அருகிலுள்ள பற்றைக்குள் வீசப்பட்டுள்ளது. அம்மன் சிலையின் தலை உடைத்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. வைரர் சூலம் பிடுங்கியெறியப்பட்டுள்ளது. பிள்ளையார் சிலை காணாமல் ஆக்கப்பட்டுள்ளது. இந்த ஈனச் செயல் தமிழ் மக்களிடையே கொதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் படுபாதகச் செயலைக் கண்டித்து நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டதுடன் பல தரப்புக்களும் கண்டனம் வெளியிட்டுள்ளன. »11


இடிக்கப்படுவதற்கு முன்னர்


இடிக்கப்பட்டதற்குப் பின்னர்

## காங்கேசன் – காரைக்கால் 4 மணி நேரப் படகுப் பயணம்

ஏப்ரல் 29இல் ஆரம்பம்
100 கிலோ பொதிக்கு அனுமதி

கொழும்பு, மார்ச் 27
காரைக்காலுக்கும் காங்கேசன் துறைக்கும் இடையிலான »11



## வெடுக்குநாறிமலையில் அட்டூழியம்; பௌத்தமயமாக்கலின் தொடர்ச்சியே!

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சரவணபவன் சாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 27
தமிழர் தாயகத்தில் தற்போது முடுக்கிவிடப்பட்டுள்ள பௌத்தமயமாக்கலின் தொடர்ச்சியாகவே வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலய சிவலிங்கமும் ஏனைய »11

## பிடுங்கப்பட்ட இடத்திலேயே மீள அமைக்கப்படவேண்டும்

அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்
என்கிறார் மறவன்புலவு சச்சிதானந்தன்

யாழ்ப்பாணம், மார்ச் 27
வெடுக்குநாறி ஆதி சிவனை பிடுங்கி வீசியதை கண்டிப்பதோடு அரசு வேடிக்கை பார்க்காமல் உரிய இடத்தில் நிறுவுவதற்கு நடவடிக்கை »11

புத்தாண்டுக்கு முன்னதாக

## பொருள்களின் விலையை குறைக்க நடவடிக்கை

வர்த்தகத்துறை அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 27
அமெரிக்க டொலருக்கு இணையாக இலங்கை ரூபா வலுப்பெற்று வருவதால், அத்தியாவசியப் »11

## வாகன இறக்குமதிக் கட்டுப்பாடு இப்போதைக்கு நீக்கப்படாது!!

150 பொருள்களுக்கான தடை விரைவில் நீக்கப்படுகிறது

கொழும்பு, மார்ச் 27
வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான தடை உடனடியாக நீக்கப்படாது. ஆனால் வேறு 100 தொடக்கம் 150 வகையான பொருள்களுக்கான இறக்குமதித் தடை எதிர் »11

## வெளிமாகாணத்தவர் நியமனங்கள் இன்னமும் முடிவெடுக்கப்படவில்லை

கூறுகிறார் வடக்கு ஆளுநர்

யாழ்ப்பாணம், மார்ச் 27
ஒரு இலட்சம் வேலை வாய்ப்பு செயலணியால் வடக்கில் உள்ளவர்களுக்கே மாகாணத்தில் முன்னுரிமை வழங்கப்படும் என்று வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.
ஒரு இலட்சம் வேலை வாய்ப்பு »10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6, 300, 000 பேர் இன்னமும் பசியில்!

கொழும்பு, மார்ச் 27

**இலங்கையில் 63 லட்சம் மக்கள் இன்னமும் உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்நோக்கியுள்ளனர் என்று செஞ்சிலுவை செம்பிறைச் சங்கங்களின் சர்வ தேச சம்மேளனம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் அந்தச் சம்மேளனம் தெரிவித்ததாவது:
இலங்கையில் 6.3 மில்லியன் மக்கள் உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொண்டுள்ளனர். போதுமான வாழ்வாதார உதவிகள் மேற்கொள்ளப்படாவிட்டால் இந்த நிலைமை இன்னும் மோசமாகும். பொருளாதார நெருக்கடியின் தாக்கம் தொடர்ந்தும் உயர்வாகக் காணப்படுகின்றது. இந்த நெருக்கடி தற்போதைக்கு முடிவுக்கு வரப்போவதில்லை என்பதை பல ஆய்வுகள் தெரிவித்துள்ளன - என்றுள்ளது. (ம-இ)



## தென்னிந்தியப் போதகர்குழு மதம்மாற்ற இங்கு வரவில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 27
தென்னிந்தியாவிலிருந்து வரவிருந்த போதகர்குழுவினர் மதம் மாற்றுவதற்காக இங்கு வரவில்லை என்று வணக்கத்துக்குரிய சாம் ராஜசூரியர் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாங்கள் யாரையும் இங்கு மதம் மாற்றுவதற்கு ஏற்பாடுகள் செய்யவில்லை. கடவுள் மனிதனுடைய உள்ளத்தை மாற்றுகின்றார். மதம் மாறும்படி நாம் ஒருபோதும் போதித்ததில்லை. மதமாற்றம் தொடர்பில் எந்தக் கூட்டமும் நடத்தமுனையவில்லை. யாழ்ப்பாணத்தில் மூன்று நாள்கள் இறை ஆசீர்வாத நிகழ்வுகளில் போதகர் போல் தினகரன் கலந்து கொள்வதற்காக ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. தவிர்க்கமுடியாத சூழ்நிலையால் அந்த நிகழ்வுகளை பிற்போட நேரிட்டிருக்கின்றது. எனினும் எதிர்காலத்தில் உரிய அனுமதிகளோடு அந்த நிகழ்வுகள் இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படும் - என்றார். (ம-20)

## ஏப்ரல் 10 ஆம் திகதிக்கு முன்னர் அரச ஊழியர்களுக்குச் சம்பளம்

கொழும்பு, மார்ச் 27
தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு ஏப்ரல் 10 ஆம் திகதிக்கு முன்னர் அரச உத்தியோகத்தர்களின் சம்பளம், ஓய்வூதியம் மற்றும் சமுர்த்திக் கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.
இந்தத் தேவைகளுக்காக 140 பில்லியன் ரூபாவை ஒதுக்க வேண்டியுள்ளது. ஏப்ரல் மாதம் என்பது ஏனைய மாதங்களை விட சுமை கூடிய மாதமாகும். மாத இறுதியில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளை ஏப்ரல் 10 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஏவ்வாறான நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிட்டாலும் ஏப்ரல் 10 ஆம் திகதிக்கு முன்னர் இவற்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளார். அதற்கமையவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (ம)

## மதமாற்றிகள் வந்தால் விடாது விரட்டுவோம்!

*மறவன்புலவு சச்சிதானந்தம் எச்சரிப்பு*



யாழ்ப்பாணம், மார்ச் 27
சைவ சமயத்தவர்களை மதமாற்றும் நோக்கில் கிறிஸ்தவர்களோ, முகமதியர்களோ அல்லது வேறு சமயத்தவர்களோ வருகை தந்தால் விரட்டியடிக்கப்படுவார்கள் என மறவன்புலவு சச்சிதானந்தம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.
அவரது இல்லத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இராவணன் ஆண்ட சிவபூமியில் தொன்றுதொட்டு சைவசமயத்தைப் பின்பற்றுகின்ற மக்களின் மரபுகளை அழித்து இல்லாதொழிப்பதற்காக கடந்த 400 ஆண்டுகளாக வேறுநாட்டவர்கள் வருகை தருகின்றனர். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயர் ஆகியோரின் வருகைக்குப் பின்னர் கிட்டத்தட்ட மதமாற்றுசபைகள் சைவர்கள் மத்தியில் உலாவருகின்றன. இந்த மண்ணின் மரபான சைவ சமயத்தை அழிக்க ஒருபோதும் இடமளியோம்.
தமிழகத்திலிருந்து குழுவொன்று மதமாற்றம் செய்வதற்காக வருகை தந்த நிலையில் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. தூண்டிலிட்டு மீனைப் பிடிப்பதுபோன்று மதமாற்றம் செய்யலாம் என இங்குள்ள சபைகள் கனவு காண்கின்றன.
கடந்த ஆண்டுகளாக இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களை தடுத்து வருவதுடன் அத்தகைய கூட்டங்களையும் நிறுத்தியுள்ளோம். எனவே சைவ சமயத்தவர்களை மதமாற்றும் நோக்கில் இங்கு வருகை தந்தாலோ துண்டுப்பிரசுரங்கள் விநியோகம் செய்தாலோ அல்லது கூட்டங்கள் நடத்தப்பட்டாலோ விரட்டியடிக்கப்படுவார்கள்- என்றார். (ச)

## புதிய ஆட்சி மூலமே நாட்டை மீட்கமுடியும்

*லக்ஷ்மன் கிரியல்ல உறுதி*

கொழும்பு, மார்ச் 27
வங்குரோத்து அடைந்துள்ள அரசாங்கத்தால் நாட்டை மீட்க முடியாது. புதியதொரு ஆட்சிமூலமே நாட்டை மீட்கமுடியும் என்று எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வங்குரோத்து அடைந்த அரசாங்கத்தால் பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்கமுடியாது. புதிய அரசாங்கம் ஒன்று அவசியம். மக்களும் இதனையே வலியுறுத்தி வருகின்றனர். தேர்தலொன்றை நடத்தினால் மக்கள் யார் பக்கம் என்பது தெரியவரும். குறைந்தபட்சம் உள்ளூராட்சிசபைத் தேர்தலை நடத்தியாவது, மக்கள் ஆணையை மதிப்பீடு செய்து கொள்ளவேண்டும்.
இதேவேளை சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி கடந்த வியாழக்கிழமை கிடைத்துள்ளது. கடனுதவியின் கீழ் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளின் அடிப்படையில் கடன் மறுசீரமைப்புகள் மேற்கொள்ளத்திட்டமிடப்பட்டுள்ளன. அத்துடன் அத்தியாவசிய பொருள்களின் விலையைக் குறைப்பதற்கும் பொருள்களின் இறக்குமதித் தடையைத் தளர்ப்பதற்கும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் புதியதொரு ஆட்சி அமைத்தாலே நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்க முடியும் - என்றார். (ம-14,44)



## அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளுக்கு எதிராக யாழில் போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 27
அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகளின் யாழ்ப்பாண விஜயத்தைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் போராட்டமொன்று நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.
அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் ரிம்மர் மண்டபத்தில் ஒன்று கூடியவேளையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது 'காணாமல் ஆக்கப்பட்டோரை விடுதலை செய்', 'அரசியல் கைதிகளை விடுதலை செய்', 'வன்முறை வேண்டாம்', 'யாழ்ப்பாணத்தை குழப்பாதே' போன்ற பல வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு அவர்கள் கோஷங்களை எழுப்பினர். (ம-20,14,26)

## வசந்த முதலிகேவுக்கு மனு கொடுத்தது உண்மை

*யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் அழகராசா விஜயகுமார் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், மார்ச் 27
மார்ச் மாதம் 12 ஆம் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து, 10 அம்ச வலியுறுத்தல்களுடனான மனுவொன்றை, அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகேவுக்கு வட்ஸ்அப்பில் அனுப்பினோம் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் அழகராசா விஜயகுமார் தெரிவித்துள்ளார்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களுடனான பேச்சை அடுத்து எந்த மனுவையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தனக்குத் தரவில்லை என்று வசந்த முதலிகே அண்மையில் தெரிவித்திருந்தார். இதையடுத்தே 10 அம்ச வலியுறுத்தலுடனான மனு வசந்த முதலிகேவுக்கு அனுப்பப்பட்டது என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் அழகராசா விஜயகுமார் தெரிவித்துள்ளார்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வலியுறுத்தல்களையும் கோரிக்கைகளையும் வசந்த முதலிகேவுக்கு வட்ஸ்அப் செய்துள்ளோம். அதை அவர் பார்த்தும் உள்ளார். இவ்வாறிருக்கையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் தனக்கு மனுவொன்றும் தரப்படவில்லை என்று அவர் எதற்காகத் தெரிவிக்கின்றார் என்று புரியவில்லை. அவருடன் எதிர்வரும் நாள்களில் பேச்சுக்களை மேற்கொள்ள முயற்சிகளை மேற்கொள்வோம் - என்றார். (ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## புத்தரும் பூச்சாண்டிகளும்

மீண்டுமொருமுறை பௌத்த – சிங்களப் பேரினவாதம் தன்னுடைய அசிங்கமுகத்தை தமிழர் தாயகத்தில் காட்டியிருக்கிறது. தமிழர்களின் தொன்மையை எடுத்தியம்பும் கல்வெட்டுகளும், கடவுளர்களும், கட்டடங்களும், சிற்பங்களும் காணப்படும் வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் இருந்த விக்கிரகங்களையெல்லாம், மூடப்பட்ட நிலப்பரப்புக்குள் இருந்தவாறே பேரினவாதம் பிடுங்கியெறிந்து விளையாடியிருக்கிறது. இத்தனைக்கும் தொல்லியலின் பேரால் அந்தத் தொன்மையான மலைக்கு பூர்வீக மக்களே செல்லமுடியாதவாறு இறுக்கமான நீதிமன்றக் கட்டளை இருக்கையில், அதனைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தியே இந்த இழிசெயலை பௌத்த – சிங்களப் பேரினவாதம் நிகழ்த்தியிருக்கிறது.

'இலங்கையில் பௌத்தத்தை தவிர வேறெந்த மதமும் பூர்வீகமானதாக அடையாளப்படுத்தப்பட்டுவிடக்கூடாது' என்பதில் பௌத்த–சிங்கள பேரினவாதம் மிகநீண்டகாலமாகவே கண்ணும் கருத்துமாக இருந்துவருகின்றது. 'ஒரு கையில் துப்பாக்கியும் மறுகையில் மகாவம்சமுமாகவே' தமிழர்தாயகம் மீதான, தன் ஆக்கிரமிப்பை காலாதிகாலமாக பேரினவாதம் திட்டமிட்டுச் செயற்படுத்தி வருகின்றது. படையினர் கைப்பற்றிய இடங்களிலெல்லாம் அரசமரம் நடப்பட்டு, அதன்கீழ் புத்தர் சிலைகள் வைக்கப்பட்டு பின்னர் அங்கு விகாரைகள் எழுப்பப்படுவது எழுதப்படாத விதியாகவே மாறியிருந்தது. அதைவிட இன்னொரு வகையிலான கலாசார, பண்பாடு, மத ஆக்கிரமிப்பையும் பேரினவாதம் கையிலெடுத்திருக்கிறது. தமிழர்களின் தொன்மையை, எம்மினத்தின் மிக நீண்ட இருப்பியலை ஆதாரபூர்வமாகக் காட்டும் இடங்கள், தலங்கள் என்பவற்றுக்கெல்லாம் 'பௌத்தமுலாம்' பூசப்படும் கைங்கரியம் தொல்லியல் திணைக்களத்தின் பெயரால் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றன.


கன்னியா, திருக்கோணேஸ்வரம், திருக்கேதீச்சரம், உருத்திரபுரம் சிவன்கோயில், குருந்தூர்மலை, வெடுக்குநாறிமலை என்று இந்தப்பட்டியல் நீண்டுகொண்டே செல் கின்றது. இந்த இடங்களில் பௌத்தத்தின் அத்துமீறலுக்கு எதிராக நீதிமன்றத்தை நாடி, தடையுத்தரவு பெற்றுக்கொண்டாலும் கூட, அந்த உத்தரவுகளையெல்லாம் புறந்தள்ளிவிட்டு பௌத்தம் தன் வேலையைத் திட்டமிட்டபடி தொடரவே செய்கின்றது. நீதியைக் காலில் நசுக்கி, பிற மதத்தலங்களை அழித்து, தனக்கு விகாரைகள் எழுப்பி 'கள்ளக்காணி' பிடிக்குமாறு புத்தர் எப்போது சொன்னார் என்றுதான் புரியவில்லை.

அண்மைக்காலமாகவே தமிழர் தாயகத்தில் திட்டமிட்ட முறையில், மத முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் வகையிலான சம்பவங்கள் தொடர்ச்சியாக அரங்கேறிவருகின்றன. திருவள்ளுவர் சிலை தொடக்கம் போல் தினகரனின் மத மாற்றக் கூட்டம் வரையில் மதரீதியான பதற்றநிலையை நம்மிடையே தொற்றவைப்பதற்கான பொறிகள் பற்றவைக்கப்படுகின்றன. இந்தக் கவனக்கலைப்பான்களோடு நம்மவர்கள் களமாடிக் கொண்டிருக்கையில், கச்சதீவிலும், வெடுக்குநாறியிலும், குருந்தூரிலும் புத்தரை ஒய்யாரமாக உட்காரவைக்கும் அத்தனை வேலைகளையும் பேரினவாதம் கனகச்சிதமாக முடித்துவிடும். ஒரு மதப்பரப்புரைக் கூட்டத்துக்கு எதிராகப் போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்து, அதுபற்றி முறைப்பாடு செய்து, அந்த முறைப்பாட்டுக்கமைய துரிதகதியில் நடவடிக்கை எடுத்து, மதம் சார் கூட்டத்துக்கு வந்தவர்களை விமானநிலையத்திலேயே திருப்பி அனுப்புமளவுக்கு 'செல்வாக்குமிக்க' சிவசேனை போன்ற இந்துமத அமைப்புக்கள் வெடுக்குநாறியில் நிகழ்ந்த அநியாயத்துக்கு எதிராக நேற்று அடையாளப் போராட்டமொன்றை யாழ்ப்பாணத்தில் நடத்தியுள்ளனர். ஆனால், இங்கே போராடி பயனில்லை. அவர்கள் அநியாயம் நிகழ்ந்த பகுதிக்குச் சென்று ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விக்கிரகங்களை மீண்டும் பிரதிஷ்டை செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும். அவர்கள் தங்கள் 'செல்வாக்கை 'வெடுக்குநாறிமலை விவகாரத்திலும் பிரயோகித்து ஆதிலிங்கேஸ்வரருக்கு நீதி கொடுப்பார்களா? அப்படியெல்லாம் செய்யாமல் வெறுமனே சிறுபான்மை மதத்தினருக்கு எதிராக மட்டுமே பொங்கியெழுந்து, பூச்சாண்டி காட்டுவது மட்டும்தான் எங்கள் வேலை, புத்தருக்கு எதிராக போராடுவதுபோல பாசாங்கு செய்துவிட்டு பம்மிவிடுவோம் என்றிருக்கப்போகிறார்களா?

நாளொரு நல்வார்த்தை

தன்னைவிட அடுத்தவன் சுகமாக வாழ்கிறானே என்கிற எண்ணம்தான் எல்லாத் துன்பங்களுக்கும் காரணமாக இருக்கிறது.

- டிரெட்ஸி.




# அரசியல் தேவைக்காக நாம் செயற்படவில்லை!

## நிமால் புஞ்சிஹேவா தன்னிலை விளக்கம்



**கொழும்பு, மார்ச் 27**

**அரசாங்கத்தின் தேவைக்காக தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தலைப் பிற்போடுகின்றது என்று சிலர் குற்றஞ்சாட்டுகின்றனர். அவ்வாறு அரசியல் தேவைக்காகச் செயற்படவேண்டிய எந்த அவசியமும் எமக்கு இல்லை - என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமால் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மாத்திரமல்ல. எந்தவொரு தேர்தலையும் தேர்தல் ஆணைக்குழுவால் தனித்து நடத்த முடியாது. அரசமைப்பு ரீதியில் தேர்தலுடன் தொடர்புடைய சகல தரப்பினரதும் ஒத்துழைப்பு அத்தியாவசியமானதாகும். எனவே, சில அரசியல்வாதிகள் தமது குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக எம்மீது மாத்திரம் குற்றம் சுமத்துவது ஏற்புடையதல்ல. அத்தோடு தேர்தல் தொடர்பில் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன எம்மை அழைத்து பேசவுள்ளதாக நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். அவரது அழைப்பை ஏற்று நாம் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகள் தொடர்பில் தெளிவுபடுத்துவதற்கும் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஆணைக்குழு தயாராகவே உள்ளது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு இரண்டு சந்தர்ப்பங்களில் நாள் குறிக்கப்பட்டபோதிலும், நிதியின்மை காரணமாக திட்டமிட்டபடி தேர்தலை நடத்த முடியாதுள்ளது. தற்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதில் காணப்படும் பிரதான சிக்கல் நிதியின்மையாகும். உயர்நீதிமன்ற உத்தரவின் பின்னரும் நிதி அமைச்சால் தேர்தலுக்கான நிதி விடுவிக்கப்படாமலேயே உள்ளது. அவ்வாறிருக்கையில் எவ்வாறு எம்மால் தேர்தலை நடத்த முடியும்? அரசாங்கத்துக்கு நிதி நெருக்கடிகள் காணப்பட்டால் வெளித்தரப்பினரிடமிருந்து நிதியைப் பெற்றுத் தேர்தலை நடத்துவதற்கான எந்தவொரு ஏற்பாடும் அரசமைப்பில் இல்லை.

வெளிதரப்பினரிடமிருந்து நிதியைப் பெற்றுக் கொள்வதற்கான சட்டவரைவொன்றோ அல்லது அமைச்சரவை யோசனையொன்றோ முன்வைக்கப்பட்டால் அதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கமுடியும்.

ஆனால், நாட்டில் அவ்வாறான ஏற்பாடுகள் இல்லை. அத்தோடு இவ்விவகாரம் தொடர்பில் நீதிமன்றத்துக்குச் செல்லவேண்டுமெனில், அதற்கான நிதியையும் நிதி அமைச்சு அல்லது திறைசேரியிடமிருந்தே பெற்றுக்கொள்ளவேண்டும். இதில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஒத்துழைப்பும் எமக்குக் கிடைக்கவில்லை.

எனவே, தனியார் சட்டத்தரணிகள் ஊடாக நீதிமன்றச் செயற்பாடுகளை முன்னெடுப்பதிலும் நிதி நெருக்கடி தாக்கம் செலுத்துகின்றது. இவை தொடர்பில் சிந்திக்காமல் சில அரசியல்வாதிகள் தமது குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக ஆணைக்குழு மீது குற்றஞ்சுமத்துவது ஏற்புடையதல்ல - என்றார். (ம)

நாளை 28.03.2023 செவ்வாய்க்கிழமை பங்குனி 14

சுபநேரம் : 10.44 - 12.14

ராகுகாலம் : 03.14 - 04.44

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசநோயுடன் பலர் உலவித் திரியலாம்

## காசநோயைக் கட்டுப்படுத்த ஒத்துழையுங்கள் காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி கோரிக்கை

**வவுனியா, மார்ச் 27**

**காசநோய் இனங்காணப்படாத பலர் பொதுவெளியில் உலவித் திரியலாம். எனவே காசநோயைக் கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று வவுனியா மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு மருத்துவ அதிகாரி கே.சந்திரகுமார் தெரிவித்தார்.**



வவுனியாவில் அண்மையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒரு நாட்டில் ஒரு லட்சம் பேரில் 63 பேர் காசநோயாளர்களாக இருப்பர். வவுனியா மாவட்டத்தில் கடந்த வருடம் 54 பேர் காசநோயாளர்களாக கண்டறியப்பட்டுள்ளனர். ஆனால் இந்த எண்ணிக்கை 100ஆக இருந்திருக்கவேண்டும். அதற்கமைய ஏனையோர் வெளியில் உலவித் திரியலாம். காசநோய் பிரதானமாக இருமல் மூலமாகவே பரவலடைகின்றது. அதனால் அனைவருக்கும் பரவக்கூடிய சாத்தியக்கூறுகள் ஏற்படுகிறது. உணவில் நாட்டமின்மை, உடல் மெலிதல், மாலைநேர காய்ச்சல் போன்றனவும் இந்த நோய்க்கான அறிகுறிகளாக உள்ளன. இந்த அறிகுறிகள் உள்ளவர்கள் தாமதிக்காமல் மருத்துவமனைகளை நாடி பரிசோதனைகளை செய்து நோயை விரைவில் அறிந்துகொள்ளவேண்டும். இந்த நோய்க்கான மருந்தை ஆறு மாதங்கள் தொடர்ச்சியாக எடுத்துக்கொண்டால் மாத்திரமே இந்த நோயை முற்றாகக் குணப்படுத்தமுடியும். எனவே நோயைக் கட்டுப்படுத்துவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றார். (ச-110)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** காரிய அனுகூலமான நாள். புதிய முயற்சி சாதகமாக முடியும். தேவையான பணம் கையில் இருந்தாலும், வீண்செலவுகளால் மனம் சஞ்சலப்படும். சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம்.

**மிதுனம்:** நன்மைகள் நடைபெறும் நல்ல நாள். முடிவுகள் நல்லபடியாக அமையும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிகளுக்குத் துணையிருப்பார்.

**கடகம்:** உறவுகளால் ஆதாயம் கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சில பிரச்சினைகள் ஏற்படும். எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டாகும்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். எதிரிகள் வகையில் எச்சரிக்கையாக இருக்கவும்.

**கன்னி:** உற்சாகமான நாள். முக்கியமான முடிவுகள் எதையும் இன்று எடுக்க வேண்டாம். விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.. உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவு கிடைக்கும்.

**துலாம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். சோர்வு உண்டாகலாம். உடல் நலனில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்புண்டு. குடும்பத்தினரின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**தனுசு:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். எதிர்பார்க்கும் காரியம் முடிவதில் தாமதம் உண்டாகும். அலைச்சலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும்.

**மகரம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். உடல்நலனில் கவனம் தேவை. ஆரோக்கியக்குறைவு ஏற்பட்டு சரியாகும். வீண் மனவருத்தம் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** கருத்து வேற்றுமை நீங்கி, அந்நியோன்னியம் அதிகரிக்கும். தன்னம்பிக்கை மற்றும் தைரியத்துடன் செயற்படுவீர்கள். காரியங்களில் வெற்றி உண்டாகும்.

**மீனம்:** பொறுமையுடன் இருக்க வேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். முடிவுகள் எடுப்பதில் அவசரம் வேண்டாம். பேசும்போது பொறுமை தேவை.

# நலவாழ்வு மையம் ஆரம்பித்து வைப்பு

**யாழ்ப்பாணம், மார்ச் 27**



மானிப்பாய் இந்துக் கல்லூரியின் நலவாழ்வு மையம், கல்லூரி வளாகத்தில் கடந்த வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

கல்லூரியின் 1979ஆம் ஆண்டு உயர்தர மாணவர்களின் அனுசரணையுடன் சதுரங்க கழகம், உடற்பயிற்சிக் கழகம், விவசாய ஊக்குவிப்பு, தொழிற்பட்டறைக்கான நிபுணர் சேவை, பேச்சுத்திறன் விருத்தி ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மாணவர் சமூகத்தைக் கட்டியெழுப்பும் முகமாக இந்த நலவாழ்வு மையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கல்லூரியின் அதிபர் செ.இளங்கோவன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக இணை சுகாதார அறிவியல் பீட விளையாட்டுப் பிரிவு தலைமை விரிவுரையாளர் கலாநிதி எஸ்.சபானந் கலந்துகொண்டு நலவாழ்வு மையத்தை ஆரம்பித்து வைத்தார். (ம-14,125)

# கால்கோள் விழா

**கொடிகாமம், மார்ச் 27**

கைதடி குருசாமி வித்தியாலயத்தின் தரம் ஒன்று மாணவர்களுக்கான கால்கோள் விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ந.ஜெயரூபன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய சைவ சமயபாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகரும் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு வலயப் பிரதிநிதியுமான வி.கமலேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார். (ச-159)



# யாழ்ப்பாணக் கல்லூரியின் துவிச்சக்கரவண்டிப் பவனி

**யாழ்ப்பாணம், மார்ச் 27**

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் 200ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு துவிச்சக்கரவண்டி பவனியொன்று நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

யாழ்.போதனா மருத்துவமனையின் முன்பாக அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரி உயர் பட்டப்படிப்புகள் பிரிவில் இந்த துவிச்சக்கரவண்டிப் பவனி ஆரம்பமானது. நிகழ்வின் ஓர் அங்கமாக 200ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 200 மரக்கன்றுகள் நடும் செயற்றிட்டமும் யாழ்ப்பாணக் கல்லூரியின் உயர் பட்டபடிப்புக்கள் வளாகத்தில் முன்னெடுக்கப்பட்டது. தொடர்ந்து கல்லூரியின் செஞ்சிவப்பு பொன்னிறச் கொடிகளை தாங்கிய வண்ணம் மாணவர்களின் சைக்கிள் பவனி ஆரம்பமாகி காங்கேசன்துறை வீதியினூடாக கல்லூரியின் சகோதரத்துவப் பாடசாலையான உடுவில் மகளிர் கல்லூரியை வந்தடைந்தது.

பின்னர் அங்கிருந்து சண்டிலிப்பாய்- சங்கானை - சித்தங்கேணியூடாக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை சென்றடைந்தது. நிகழ்வில் கல்லூரியின் அதிபர் ருஷிரா குலசிங்கம், கல்லூரியின் பிரதி அதிபர் ஏ.சி.பிரான்சிஸ், கல்லூரியின் உப அதிபர் கிளாடிஸ் முத்துராஜ், உடுவில் மகளிர் கல்லூரியின் அதிபர் மதுரமதி குலேந்திரன், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-20)





முல்லைத்தீவு சிலாவத்தை தெற்கு, தியோகு நகர் பகுதியில் அமைந்துள்ள சர்வேஸ்வரர் ஆலயத்தின் மஹா கும்பாபிசேகம், 'ஆகம கலாநிதி' பிரம்ம ஸ்ரீ கணபதீஸ்வர ராமக்குருக்கள் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. (ம-14,246)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி கிழக்குப் பகுதியில் சுருக்குவலைத்தொழில் தீவிரம்!

## மீனவர்கள் பகிரங்கக் குற்றச்சாட்டு உடன் கட்டுப்படுத்தக் கோரிக்கை

**யாழ்ப்பாணம், மார்ச் 27**

**வடமராட்சி கிழக்குப் பகுதியில் சுருக்குவலைத் தொழில் தீவிரமாக இடம்பெற்று வருகின்றது. அதை உடனடியாகக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இல்லாவிட்டால் போராட்டம் முன்னெடுக்கப்படும் -என்று வடமராட்சி மீனவர்கள் எச்சரித்துள்ளனர்.**

வடமராட்சி வடக்கிலுள்ள 12 மீனவ சங்கங்கள் இணைந்து இந்தக் கோரிக்கையை முன்வைத்துள் ளன. அந்த மீனவ சங்கங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் பருத்தித் துறைமுனை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய கலந் துரையாடலை அடுத்து மேலும் தெரிவித்ததாவது:-

அண்மைக்காலமாக வடமராட்சி கிழக்கில் ஒருசில மீனவர்கள் சுருக்குவலைத் தொழிலில் தீவிர மாக ஈடுபட்டு வருகின்றனர். இதனால், சிறுதொழில் செய்யும் மீனவர்கள் (மட்டுப்படுத்தப்பட்ட வலைகளை வைத்து தொழிலில் ஈடுபடும் மீனவர்கள்) கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, கடற்றொழில் திணைக் களம் மற்றும் கடற்படை, நீரியல் வளத்துறை அமைச்சு ஆகியன உடனடியாக இந்த விடயத்தில் தலை யிடவேண்டும் - என்றனர். (ம)

# 3 கிலோ கேரளக்கஞ்சாவுடன் நெல்லியடியில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 27

வடமராட்சி - மானாண்டி பகுதியில் கேரளக் கஞ் சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடமிருந்து 2 கிலோ 900 கிராம் கேர ளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. அல்வாய் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞரே கைதுசெய்யப் பட்டுள்ளார். சந்தேகநபரை மேலதிக விசாரணை யின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-27)

# தாக்குதல் காயங்களுடன் இருவர் மருத்துவமனையில்

## விசேட அதிரடிப்படை தாக்கியது என்று அவர்கள் குற்றச்சாட்டு

வவுனியா, மார்ச் 27

மதுபோதையில் சிவில் உடையில் வந்த விசேட அதி ரடிப் படையினர் தாக்கியதாகத் தெரிவித்து வவுனியா மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் இரவு இருவர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்கள் தெரிவித்ததாவது:-

வவுனியா, மரையடித்தகுளம், செங்கராத்திமோட் டைப் பகுதியில் பற்றைக்காடாக இருந்த எமது காணி களை பிரதேச செயலகத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாகத் துப்புரவுப் பணியில் ஈடுபட்டபோது, அங்கு வருகைதந்த விசேட அதிரடிப்படையினர், குறித்த காணி வன உயிரிகள் திணைக்களத்தின ருக்குச் சொந்தமானது என்றும் அதில் துப்புரவுப் பணிகளை மேற்கொள்ளவேண்டாமென்று தெரி வித்தனர். இதையடுத்து நாம் மேலிடத்துக்குத் தெரியப்படுத்திவிட்டு துப்புரவுப் பணிகளை முன் னெடுத்தோம். துப்புரவுப் பணிகள் முடிந்த பின்னர் எமது வீட்டுக்கு முன்னால் நாம் நின்றுகொண்டிருந்த போது அங்கு சிவில் உடையில் மதுபோதையில் வந்த விசேட அதிரடிப்படையினர் எம்மைத் தாக்கினர் - என்றனர். (ம-110)

# நான்கு பல்பொருள் நிலையங்களில் காலாவதியான பொருள்கள் அழிப்பு

சாவகச்சேரி, மார்ச் 27

எழுதுமட்டுவாழ் பிரிவிலுள்ள நான்கு பல்பொருள் நிலையங் களில் காணப்பட்ட எட்டு வகை யான காலாவதிப் பொருள்கள் சுகாதாரப் பரிசோதகர் குழுவால் கடந்த புதன்கிழமை அழிக்கப் பட்டன.

எழுதுமட்டுவாழ் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் இயங்கும் உணவு கையாளும் நிலையங் கள் மற்றும் பலசரக்கு விற்பனை நிலையங்களில் சாவகச்சேரி சுகா தார மருத்துவ அதிகாரி பிரிவினர் திடீர் சோதனைகளை அண்மை யில் முன்னெடுத்தனர். அதில் நான்கு பலசரக்கு விற்பனை நிலையங்களில் எட்டு வகையான காலாவதிப் பொருள்கள் இனங்கா ணப்பட்டன. அதனையடுத்து வர்த் தகர்களை எச்சரிக்கைசெய்து வர்த் தகர்களின் சம்மதத்துடன் காலாவ தியான பொருள்கள் அனைத்தும் அழிக்கப்பட்டன. (ம-14-9)

# வீதியோரத்தில் சடலம் மீட்பு!

## விபத்து எனச் சந்தேகம்

முல்லைத்தீவு, மார்ச் 27

முல்லைத்தீவு - துணுக்காய் பகுதியில் வீதியோரமாக காயங் களுடன் சடலமொன்று மீட்கப் பட்டுள்ளது. அவர் வீதி விபத் தில் இறந்திருக்கலாம் என்றும், விபத்தை ஏற்படுத்திய வாகனம் தப்பிச் சென்றிருக்கலாம் என் றும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

பனங்காமம் பகுதியைச் சேர்ந்த செல்வராசா ஜெயக்குமார் (வயது-49) நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் மீட்கப்பட்டமை தொடர் பான மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன. (ச-19)

# 3 மாவீரர்களின் தாயார் மறைவு

யாழ்ப்பாணம், மார்ச் 27

தாயக விடுதலைப் போராட்டத்துக்கு தனது 3 பிள்ளைகளை உவந் தளித்த தாயார் ஒருவர் சுகவீனம் காரணமாக நேற்றுமுன்தினம் சனிக்கிழமை உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம் வயாவிளானை சேர்ந்த ஆறுமுகம் லட்சுமி (வயது-84) என்பவரே காலமானார். இவர் தாயக விடுதலைப் போராட்டத்தில் காவியமான கடற்கரும்புலி கப்டன் மாலிகா, வீரவேங்கை மாவரசி, வீரவேங்கை செங்கதிர் ஆகியோரின் தாயார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# தப்பித்த கைதி; துரத்திப் பிடிப்பு

சிறைச்சாலைக் கைதியொருவர் சிறைச்சாலை அதிகாரி களிடமிருந்து தப்பியோடிய நிலையில் அவர் துரத்திப் பிடிக்கப்பட்டுள்ளார். வவுனியா மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரியிடம் கைதியை முற்படுத்துவதற்காக சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பில் கைதியொருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை கொண்டுவரப்பட்டார். அப்போது சிறைச்சாலை அதிகாரிகளிடமிருந்து கைதி தப்பித்து வயல் வெளி ஊடாக ஓடிய நிலையில் கைதியை துரத்திச்சென்று சிறை அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர். (ச-110)

# மாடு கடத்தல் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 27

அச்சுவேலி தோப்பு பகுதியிலி ருந்து ஐந்துசந்திப் பகுதிக்கு பசுமாடு ஒன்றை நடத்திக் கடத் திச் சென்றவரை அச்சுவேலிப் பொலிஸார் கைது செய்துள் ளனர்.

அச்சுவேலிப் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட இரகசியத் தக வலுக்கு அமையவே மேற்படி நபர் கைது செய்யப்பட்டார்.

மாட்டை இறைச்சியாக்குவதற் காக அவர் கொண்டு சென் றமை முதற்கட்ட விசாரணை களின் அடிப்படையில் தெரிய வந்துள்ளது.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள் ளனர். (ச-23)



# வகுப்பறைக் கட்டடம் மீது மரம் வீழ்ந்து சேதம்!

வவுனியா, மார்ச் 27

வவுனியாவில் அண்மையில் வீசிய மினி சூறாவளியால் பெரிய மரமொன்று சரிந்து வீழ்ந்ததில் வவுனியா காமினி மகா வித்தி யாலயத்தின் வகுப்பறைக் கட்டடம் சேத மடைந்துள்ளது. வவுனியா மற்றும் அதனுடன் அண் டிய பகுதிகளில் கடந்த வெள்ளிக் கிழமை மழையுடன்கூடிய மினி சூறாவளி வீசியது. இதன்போதே இந்த இடர் சம்பவித்துள்ளது என்று தெரிவிக்கப்படு கின்றது. (ச-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அளவெட்டி தெற்கு அ.மி.த.க. பாடசாலையில் அதிபராகப் பணியாற்றி பதவி உயர்வுடன் இடமாற்றம் பெற்றுச் சென்ற செ.சுதாகரனுக்கு பிரிவுபசார நிகழ்வும் கௌரவிப்பும் மேற்படி பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களால் அண்மையில் நடத்தப்பட்டது. (ய-36)



தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்கு 3 லட்சம் ரூபா பெறுமதியான மருந்துப்பொருள்கள் அண்மையில் வழங்கப்பட்டன.
சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த சபாநாயகம் சிவகுமார் குடும்பத்தின் நிதிப்பங்களிப்பில் இந்த மருந்துப்பொருள்கள் வழங்கப்பட்டன. (ஒ-14)



# மாணவர்களுக்கு சீருடை வழங்கல்

கிளிநொச்சி வடக்கு, தெற்கு கல்வி வலய மாணவர்களுக்கு இலவசப்பாடநூல், சீருடைகள் கடந்த வியாழக்கிழமை வழங்கப்பட்டன.
கிளிநொச்சி வடக்கு கல்வி வலய மாணவர்களுக்கு தர்மபுரம் இலக்கம் 1 அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையிலும் கிளிநொச்சி தெற்கு கல்வி வலய மாணவர்களுக்கு வட்டக்கச்சி மத்திய கல்லூரியிலும் வழங்கப்பட்டன.
கிளிநொச்சி மாவட்டச்செயலர் றூபவதி கேதீஸ்வரன், கிளிநொச்சி வடக்கு வலயக் கல்விப்பணிப்பாளர் க.அ.சிவனருள்ராஜா, கிளிநொச்சி தெற்கு வலயத்தின் பிரதிக்கல்விப்பணிப்பாளர் நா.இளையதம்பி, ஆசிரியர்கள் எனப்பலர் கலந்துகொண்டு மாணவர்களுக்கு இலவச பாடநூல் மற்றும் சீருடைகளை வழங்கினர். (ம-14,113)



நவாலி கலைமகள் பாலர் முன்பள்ளியில் கல்வி பயிலும் பாலர்களுக்கு, பூமணி அம்மா அறக்கட்டளையால் கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. அறக்கட்டளையின் செயலாளர் ந.விந்தன் கனகரட்ணம், ஆலோசகர் இ.மயில்வாகனம், நிர்வாகசபை உறுப்பினர் சா.தவசங்க்ரி ஆகியோர் மேற்படி உபகரணங்களை வழங்கினார்கள். (ம-20)



மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயத்தின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு பாடசாலை மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. வித்தியாலய அதிபர் க.இளங்கோவன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் வ.நடராசா கலந்துகொண்டார். (ம-14,159,9)



வடக்கு மாகாண தொழிற்றுறை திணைக்களத்தின் ஏற்பாட்டில் சிறுதொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் விற்பனை சந்தை கிளிநொச்சி பசுமைப்பூங்கா வளாகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமானது. நிகழ்வில் வடமாகாண மகளிர் அமைச்சின் செயலாளர், கிளிநொச்சி மாவட்டச்செயலர், கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்டச்செயலர், பிரதேச செயலர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ம-14)



கிளிநொச்சி பளை கமநலசேவைகள் நிலையத்தில் புத்தரிசி வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சிப் பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் சோ.சிவநேசன், பச்சிலைப்பள்ளி பிரதேசசெயலக திணைக்கள உதவித்திட்டமிடல் பணிப்பாளர் எம்.மாலதி ஆகியோர் கலந்துகொண்டனர். (ச)



யாழ்ப்பாணம் காட்டுப்புலம் அ.த.க. பாடசாலையில் கடந்த வருடம் புலமைப்பரிசில் பரீட்சையில் 145 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த மாணவனையும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் அவர்களை வழிப்படுத்திய ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு, பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ம-14)



அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவர்களின், 'மாதிரி நாடாளுமன்ற அமர்வு' கல்லூரி மண்டபத்தில் கடந்த 22ஆம் திகதி புதன்கிழமை இடம்பெற்றது. கல்லூரி முதல்வர் நா.கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் கலந்துகொண்டார். (ம-14,63)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INVITATION FOR BID 2023/04 REGIONAL DIRECTORATE OF HEALTH SERVICES (NP) JAFFNA

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a grant from **World Bank** towards the cost of **Primary Health Care System Strengthening Project (PSSP)-2023** and intends to apply part of the proceeds of this grant to payments under the contracts listed below in the table.
2. The **Chairman, Regional Procurement Committee**, on behalf of the Regional Director of Health Services, Regional Directorate of Health Services, NP, Jaffna now invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table.
3. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**

*"Bidding will be conducted through National Competitive Bidding (NCB. The Public Finance Circulars No 03/2020 and 03/2020(i) dated 09.10.2020 and 11.01.2021 respectively will also be adopted.*

4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
5. Qualification' requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Bidding Data & Contract Data (Section 5) for SBD 1 Documents (Works specified in Table below as **Category 1**). Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 Documents (Works specified in Table below as **Category 2**)
6. Interested bidders may obtain further information from **address given below in 7** and inspect the bidding documents at the same place on any working days from 09:00 hrs to 15:00 hrs.
7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Regional Director of Health Services, Regional Directorate of Health Services, NP, Jaffna, No.572/3, Hospital Road, Jaffna (T.P:021 222 1815, Fax:021 222 9991) from 9:00 hrs to 15:00 hrs. during the period from 2023.03.23 to 2023.04.06 upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment will be by cash.
8. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, Regional Directorate of Health Services, NP, Jaffna, No.572/3, Hospital Road, Jaffna on or before 10.30 a.m at 2023.04.10.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
9. Pre-Bid Conference will be held at **Conference Hall, Regional Directorate of Health Services, NP, Jaffna** commencing at **2.30 P.M on 2023.04.03.**
10. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Tables.

| Category 1 | | |
|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | From 2023-03-27 until 2023-04-10 |
| | Pre-Bid Conference | At 2.30 P.M on 2023-04-03 |
| | Closing and Opening of Bids | At 10.30 A.M on 2023.04.11 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security: Security Amount | Required Bid Security: Validity Period |
|---|---|---|---|---|---|---|---|
| PSSP/NP/RDHS/JA/03/2023 | Gramodaya Health Care Centre at Ariyalai. | 16.00 | 150 Days | C7 or C6 or C5 (Buildings) | 5,000.00 | 160,000.00 | Till 2023.07.25 |
| PSSP/NP/RDHS/JA/04/2023 | Gramodaya Health Care Centre at Alvai. | 15.65 | 150 Days | C7 or C6 or C5 (Buildings) | 5,000.00 | 157,000.00 | Till 2023.07.25 |
| NP/04/41/2023/PSSP/W/34 | Improvement to Internal Road at Base Hospital Chavakachcheri | 8.64 | 84 Days | C8 or C7 or C6 (High way) | 3,500.00 | 87,000.00 | Till 2023.07.25 |

| Category 2 | | |
|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | From 2023-03-27 until 2023-04-10 |
| | Pre-Bid Conference | At 2.30 P.M on 2023-04-03 |
| | Closing and Opening of Bids | At 10.30 A.M on 2023.04.11 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|
| NP/04/41/2023/PSSP/W/35 | Construction of Generator room at DH Manipay,Jaffna. | 1.78 | 77 Days | C9or C8 (Buildings) | 1,500.00 | 18,000.00 | Till 2023.06.27 |
| NP/04/41/2023/PSSP/W/36 | Construction of Placenta pit at Base Hospital Tellippalai,Jaffna | 0.65 | 61 Days | C9or C8 (Buildings) | 1,500.00 | 6,500.00 | Till 2023.06.27 |
| NP/04/41/2023/PSSP/W/37 | Improvement of Nurses Quarters at Base Hospital Tellipplai,Jaffna. | 1.45 | 74 Days | C9or C8 (Buildings) | 1,500.00 | 15,000.00 | Till 2023.06.27 |
| NP/04/41/2023/PSSP/W/38 | Roof Renovation & Ceiling Works of Doctors on call Room ward - 01-BH Tellippalai. | 0.175 | 74 Days | C9or C8 (Buildings) | 1,500.00 | 2,000.00 | Till 2023.06.27 |
| NP/04/41/2023/PSSP/W/39 | Roof Renovation works for Drug Store and Emergency Treatment Unit-BH Tellippalai,Jaffna | 0.51 | 57 Days | C9or C8 (Buildings) | 1,500.00 | 5,500.00 | Till 2023.06.27 |

**Chairman**
**Regional Procurement Committee**
**Regional Directorate of Health Services, NP,**
**No.572/3, Hospital Road,**
**Jaffna.**

(CR/39532)1-6

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கால்கோள் விழா

யாழ்.கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் தரம் ஒன்று மாணவர்களுக்கான கால்கோள் விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலையின் அதிபர் இ.ஹஸ்ரன் றோய் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ச-66)

## நவக்கிரக ஹோமம்

இருபாலை, கோப்பாய்தெண்கோவை திருவருள்மிகு கற்பகப் பிள்ளையார் ஆலயத்தில் நவக்கிரக ஹோமம் நாளை மறுதினம் புதன் கிழமை சனீஸ்வரப் பெயர்ச்சியன்று காலை 9 மணி முதல் இடம் பெறவுள்ளது என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ச)


## வீடு வாடகைக்கு விடப்படும்

அச்சுவேலி நவக்கிரியில் சகல வசதிகளுடன் கூடிய இரண்டு அறைகளையுடைய புதிய வீடு வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகொள்ளும் நேரம் : இரவு 8.00 மணிக்குப்பிறகு

(cs.24104) (2.6)

**021 223 2976**


## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் கடையிற் சுவாமி வீதியில் அமைந்துள்ள **கடையிற் சுவாமிகள் சமாதி சிவாலயத்திற்கு நிர்வாகத்தை தெரிவு செய்வதற்கான பொதுக்கூட்டம்** கூடப்பட உள்ளது. இதில் உபயகாரர்கள், கோயில் அயலவர்கள், கடையிற் சுவாமிகளின் அடியவர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் கலந்து கொள்ளவும்.

- **இடம் :** **கடையிற் சுவாமிகள் கோயில், நீராவியடி, யாழ்ப்பாணம்.**
- **காலம் :** **02.04.2023 ஞாயிற்றுக்கிழமை**
- **நேரம் :** **மாலை 3.00 மணி**

மேற்படி பொதுக்கூட்டத்தில் அனைவரும் தவறாது சமுகம் அளிக்கவும்.

**தொடர்பு: 074 018 0236**

**து.சிறிகாந்தராஜா,**
**உபதலைவர்,**
**கடையிற் சுவாமிகள் கோயில்,**
**நீராவியடி, யாழ்ப்பாணம்.**

(cs.22532) (2.6)

## மரண அறிவித்தல்



### திருமதி மாலினிதேவி சிவலிங்கம்

திருநெல்வேலி நாவலடி லேனைப் பிறப்பிடமாகவும் கனடாவை (Ottowa) வசிப்பிடமாகவும் கொண்ட மாலினிதேவி சிவலிங்கம் கடந்த (22.03.2023) புதன் கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கராசா - மகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சிவலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், ரேக்கா, கார்த்திகா, நீருஜா ஆகியோரின் பாசமிகு தாயாரும், சரவணபவான், கமலா, மாலா, மீரா, காலஞ்சென்ற ஸ்ரீ மற்றும் பிறேமா, ஜெயா ஆகியோரின் அன்பு அக்காவும், செந்திலின் மாமியாரும், சந்தியா, சந்தோஷ் ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (27.03. 2023) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அரசடி அம்மன் வீதி,**
**திருநெல்வேலி.**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

(CS 24199)(3/6)

## 31ஆம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 28.02.2023 அன்று இறைபதம் அடைந்த

**அமரர் திரு.தர்மகுலசிங்கம் ரதிகரன்**

அவர்களின் 31ஆம் நாள் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை எதிர்வரும் 30.03.2023 வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் தகப்பனார் திரு தர்மகுலசிங்கம் அவர்களின் கொல்ல விளாங்குளம் இல்லத்தில் நடைபெறஉள்ளது. அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு உறவினர்கள் நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நேரில் பங்கேற்ற உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவருக்கும். தொலைபேசி மற்றும் வலைத்தளங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்த அன்புள்ளங்களுக்கும் இரங்கல் பதாகைகள் மூலம் அனுதாபம் தெரிவித்த அன்புள்ளங்களுக்கும் பல வழிகளிலும் உதவி ஒத்தாசைகள் வழங்கிய அன்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இலக்கம் 65,
கொல்லவிளாங்குளம்,
வவுனிக்குளம்.

குடும்பத்தினர்
T.P : 077 266 9808

(CR 39539) (3/6)


## யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் சித்திரைப் புத்தாண்டு வரை

# ஜவுளிப் பண்டிகை

**ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தலைசிறந்த ஆடைகள்**

- பட்டுச்சாறிகள்
- கொட்டன் சாறிகள்
- சல்வார்கள்
- சல்வார் துணிகள்
- டொப், புரொக்
- சேட் மற்றும்
- சிறுவர் சிறுமியருக்கான ஆடைத் தெரிவுகள்.




இது பிரமாண்ட ஜவுளித்துறையின் சாம்ராஜ்யம்

**இந்தியன் செலக்ஷன்**

காலம்: 17.03.2023 முதல் 14.04.2023 வரை
இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.
(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)


## மரண அறிவித்தல்



தோற்றம் 03 - 05 - 1949

மறைவு 25 - 03 - 2023

**கந்தையா விஸ்வலிங்கம்**

புங்குடுதீவு 4ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா விஸ்வலிங்கம் அவர்கள் நேற்றுமுன்தினம் (25.03.2023) சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் - மீனாட்சி தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற அன்னலெட்சுமியின் பாசமிகு கணவரும், ததீஸ்வரி, காலஞ்சென்ற வளர்மதி, காலஞ்சென்ற சுபிதா, துஷ்யந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், விபூசனாவின் அன்பு மாமனாரும், அபினா, அஸ்வினா, அக்ஷனா, மாதேஷ் ஆகியோரின் அருமைப் பேரனும், காலஞ்சென்றவர்களான சற்குணம், மனோன்மணி, சுந்தரலிங்கம், நவரத்தினசிங்கம் மற்றும் கிருஸ்ணப்பிள்ளை, மகாலெட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான இராசமணி, தவமணி, கந்தசாமி, மகாலெட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.03.2023) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

48/16, பரவைக்குளம்,
3ம் ஒழுங்கை, சிவன் வீதி,
திருநெல்வேலி.

தகவல்
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 12.05.1947

மறைவு 22.03.2023

**சின்னராசா-கிருஸ்ணகுமார்**

(ஓய்வுபெற்ற முன்னாள் உப அதிபர்)

அவர்கள் கடந்த (22.03.2023) புதன்கிழமை காலமானார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உதயன் குழுமத் தலைவரும், பணியாளர்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சிலைப்பள்ளி குடிநீர்த்திட்டம் விரைவில் முன்னெடுக்கப்படும்

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் உறுதி

**கிளிநொச்சி, மார்ச் 27**

**கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் தடைப்பட்டுள்ள குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தை விரைவில் முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் ஜீவன் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனிடம் உறுதியளித்துள்ளார்.**

நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன் மற்றும் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர், அமைச்சர் ஜீவன் தொண்டமானை அவரது அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை சந்தித்துக் கலந்துரையாடியபோதே இந்த உறுதிமொழியை வழங்கினார்.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்கும் திட்டமானது, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டப் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், பளையில் அமைக்கப்பட்ட நீர்த்தாங்கியை கிளிநொச்சி நீர்த்தாங்கியுடன் இணைப்பதற்கான நீர்க்குழாய்கள் இன்மையால் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரின் கவனத்துக்குக்கொண்டு சென்றதையடுத்து, நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபையின் தலைவருக்கு திட்டத்தை ஆரம்பிப்பதற்கான உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. அதன்பின்னரே விநியோகத் திட்டத்தை விரைவாக நிறைவுசெய்து தருவோம் என்று அமைச்சர் ஜீவன் தொண்டமான் உறுதியளித்தார். (ம-14,125)



## இலவச அரிசி விநியோகம் முல்லைத்தீவில் ஆரம்பம்!

முல்லைத்தீவு, மார்ச் 27

பொருளாதார நலிவுற்ற குடும்பங்களுக்கு அரசாங்கத்தால் இலவசமாக அரிசி வழங்கும் திட்டம் முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

முதற்கட்டமாக புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட உடையார்கட்டு தெற்கு கிராம அலுவலர் பிரிவில் முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதன் இந்தத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பொருளாதாரம் நலிவுற்ற, தெரிவு செய்யப்பட்ட 33 ஆயிரத்து 303 குடும்பங்களுக்கு தலா 10 கிலோ வீதம் அரிசிப் பொதிகள் வழங்கப்படவுள்ளன. புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் எஸ்.ஜெயகாந் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதன், மாவட்ட பொறியியலாளர் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச திட்டமிடல் பணிப்பாளர், கிராமஅலுவலர், சமுர்த்தி உத்தியோகத்தர் எனப்பலர் கலந்துகொண்டனர். (ச-19)

## பெருந்திருவிழா ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

இணுவில் சிவகாமி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா கடந்த வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து 12 தினங்கள் காலை, மாலை உற்சவங்களாக நடைபெறவுள்ள இவ் ஆலய பெருந்திருவிழாவில் எதிர்வரும் 30ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 7.30 மணியளவில் மஞ்சத் திருவிழாவும், ஏப்ரல் 3ஆம் திகதி திங்கட்கிழமை இரவு 7.30 மணியளவில் சப்பரத் திருவிழாவும், 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் தேர்த் திருவிழாவும், மறுநாள் 5ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணியளவில் தீர்த்தத் திருவிழாவும், அன்றையதினம் இரவு கொடியிறக்க உற்சவமும் நடைபெறும் என மேற்படி ஆலய ஆதீனகர்த்தா தெரிவித்துள்ளார். (ஒ-66)

# கச்சதீவில் புத்தர் சிலைகளை உடனடியாக அகற்றவேண்டும்

## ஆலயத்தின் பரிபாலகர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 27

கச்சதீவு அந்தோனியாருக்காக அர்ப்பணிக்கப்பட்ட தீவாகும். இந்தியா - இலங்கை என்ற இரு நாடுகளின் அடையாளச் சின்னமாக விளங்குகின்ற கச்சதீவுப் பகுதியிலுள்ள புத்தர் சிலை ஆலயத்தின் புனிதத்துக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அகற்றப்படவேண்டும். இவ்வாறு கச்சதீவு யாத்திரை தலபரிபாலகர் அருட்பணி வசந்தன் அடிகளார் கோரிக்கை விடுத்தார்.

கச்சதீவில் பௌத்த சின்னங்கள், புத்தர் சிலைகள் என்பன வைக்கப்பட்டுள்ளன என புகைப்படங்கள் வெளியான நிலையிலேயே நேற்றுமுன்தினம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கச்சதீவு என்றாலே தமிழக மக்களுக்கும் இலங்கைத் தமிழ்மக்களுக்கும் நினைவில் வருவது புனித அந்தோனியார் ஆலயமே. கச்சதீவு அந்தோனியாருக்காக அர்ப்பணிக்கப்பட்ட தீவாக தொன்றுதொட்டு காணப்படுகிறது. ஆனால், திட்டமிட்ட வகையில் அண்மைய நாள்களில் இரண்டு புத்தர் சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளதுடன் அரச மரக்கன்றுகளும் நடப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் வரலாற்றைத் திரிபுபடுத்துவதற்கான முயற்சியே இது. வடக்கு - கிழக்கு தமிழர் பகுதியில் பௌத்த திணிப்பு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகிறது. போருக்குப் பின்னர் இன ஒற்றுமை பற்றிப் பேசப்படும்போது இவ்வாறான விடயங்கள் நிறுத்தப்படவேண்டும். கச்சதீவு அந்தோனியார் ஆலயத்தின் புனிதத்துக்கும் தனித்துவத்துக்கும் பாதிப்புக்கள் ஏற்படாத வகையில் புத்தர் சிலைகள் அகற்றப்படவேண்டும் - என்றார். (ச-இ)

## பொலிஸ்மா அதிபருக்கு அழைப்பாணை

கொழும்பு, மார்ச் 27

பொலிஸ்மா அதிபர் சீ.டீ.விக்ரமரத்னவை எதிர்வரும் 3ஆம் திகதி முன்னிலையாகுமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. நீதியரசர்களான எஸ்.துரைராஜா, ஏ.எச்.எம்.டி.நவாஸ் மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகியோர் அடங்கிய குழாம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

தடுப்பில் உள்ளவர்கள், பல்வேறு விசாரணைகளுக்காக வெளியே அழைத்துச் செல்லப்படும் சந்தர்ப்பங்களில் துப்பாக்கிச்சூட்டில் மரணிக்கும் சம்பவங்களைத் தடுப்பதற்கு வழிகாட்டல் கோவையைத் தயாரிக்குமாறு முன்னதாக நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

எனினும் அது நடைமுறைப்படுத்தப்படாமை தொடர்பில் எதிர்வரும் மாதம் 3 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகி விளக்கமளிக்க வேண்டும் என பொலிஸ்மா அதிபருக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ச-இ)

# அரசின் நெல் கொள்வனவால் 33,000 குடும்பங்கள் நன்மை!

## முல்லைத்தீவு மாவட்டச் செயலர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, மார்ச் 27

அரசால் முன்னெடுக்கப்படும் நெல்கொள்வனவு திட்டத்தால் முல்லைத்தீவு மாவட்டத்தில், சுமார் 33 ஆயிரத்துக்கு 303 குடும்பங்கள் நன்மையடையக் கூடிய வாய்ப்புள்ளது என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதன் தெரிவித்துள்ளார். முல்லைத்தீவு மாவட்டத்தில் பொருளாதாரம் நலிவுற்ற குடும்பங்களுக்கு இலவச அரிசி வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகளிடமிருந்து 100 ரூபாவுக்கு நெல்லைக் கொள்வனவு செய்து அதனை யாழ்.மாவட்டம் உள்ளிட்ட ஏனைய மாவட்டங்களுக்கு விநியோகிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒட்டுசுட்டான், கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு பகுதிகளிலிருந்து யாழ்.மாவட்டத்துக்கு அரிசியை வழங்கி வருகின்றோம்.

தற்போது மாவட்டத்துக்கு மேலதிகமாக 319 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடும் கிடைத்துள்ளது. அதற்மைய முல்லைத்தீவு மாவட்டத்துக்கு தேவையான நெல்லை கொள்வனவு செய்து அரிசியாக்கி வைத்துள்ளோம். ஏனைய மாவட்டங்களுக்கும் நெல்லை கொடுக்கவேண்டிய தேவையிருக்கின்றது.

நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு வங்கி 27 வீதம் வட்டி கோரியுள்ளமையால் விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்து வழங்கமுடியாது என நெல் சந்தைப்படுத்தும் சபை கைவிரித்திருந்தது. இந்த நிலையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் விவசாயிகளிடம் இருந்து 100 ரூபாவுக்கு நெல்லைக் கொள்வனவு செய்து வறிய குடும்பங்களுக்கு அரிசியாக விநியோகிக்கும் திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்தச் செயற்திட்டம் சிறந்த செயற்பாடாக அமைந்துள்ளது- என்றார். (ச-19)

## கசிப்புடன் பெண் கைது

கிளிநொச்சி, மார்ச் 27

கிளிநொச்சி-தருமபுரம்பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கசிப்புடன் பெண்ணொருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார், மோட்டார் சைக்கிளில் பயணித்த மேற்படி பெண்ணை வழிமறித்துச் சோதனையிட்டபோதே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்தனர். (ம-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகப் படைப்பாக்கப் போட்டி யாழ். பல்கலைக்கு முதலிடம்!



இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களிடையே நடைபெற்ற ஊடகப் படைப்பாக்கப் போட்டிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

8 பிரிவுகளில் நடைபெற்ற போட்டிகளில், 40 இடங்களில் 25 இடங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை வென்று சாதனை படைத்துள்ளது.

இந்தப் போட்டிகளில் பேராதனைப் பல்கலைக்கழகம், சிறி ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம், தென் கிழக்குப் பல்கலைக்கழகம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்பன பங்குபற்றியிருந்தன.

துறைசார் நிபுணர்களாலும், ஊடகத் தொழில்வாண்மையாளர்களாலும் சுமார் ஒரு வருடமாகத் தொடர்ச்சியாக வழங்கப்பட்ட செயலமர்வுகள், பயிற்சிகள் ஆகியவற்றைத் தொடர்ந்து, நான்கு பல்கலைக்கழகங்களிடையே இந்தப்போட்டிகள் நடத்தப்பட்டிருந்தன.

5 போட்டிகளில் முதல் மற்றும் இரண்டாம் இடங்களையும், 6 போட்டிகளில் மூன்றாம் இடங்களையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்கள் வெற்றி கொண்டனர்.

ஒவ்வொரு பிரிவிலும் 5 இடங்களுக்கு வழங்கப்பட்ட விருதுகளில் டிஜிற்றல் கமரா புகைப்படங்கள், கருத்துப் படங்கள் மற்றும் டூடுள் சித்திரங்கள் ஆகிய இரண்டு பிரிவுகளிலும் அனைத்து இடங்களையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்களே கைப்பற்றிக் கொண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கொழும்பில் நடைபெற்ற விருதுகள் வழங்கும் நிகழ்வுகளில் நேரியாகப் பங்குபற்றிய மாணவர்கள், தாம் பெற்ற விருதுகளுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜாவைச் சந்தித்து வாழ்த்துக்களைப் பெற்றுக்கொண்டனர். இந் நிகழ்வில், கலைப்பீடப் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம், ஊடகக் கற்கைகள் துறைத் தலைவர் பூங்குழலி சிறிசங்கீர்த்தனன், விரிவுரையாளர்கள் தினேஷ் கொடுதோர், அனுதர்ஷி கபிலன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர். (அ-ஒ.இ)

# இந்தியாவிடமிருந்து மீண்டும் ஒரு பில்லியன் டொலர் கடன்

## பேச்சுக்களை ஆரம்பித்தது இலங்கை

கொழும்பு, மார்ச் 27

இந்தியாவிடமிருந்து சுமார் ஒரு பில்லியன் அமெரிக்க டொலரை கடனாகப் பெற்றுக்கொள்வதற்கான பேச்சுக்களை இலங்கை ஆரம்பித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநரும் மூத்த பொருளாதார நிபுணருமான கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கியால் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

இந்தக் கடன் தொகையானது இந்திய ரூபாவில் பெறப்படும் என்றும் கடன் தொகையின் பெறுமதி இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.

கடன் பெறுமதி ஒரு பில்லியன் அமெரிக்க டொலரை அண்மித்திருக்கும் என்றும் இந்தப் பணம் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தகத்துக்குப் பயன்படுத்தப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (அ-ஒ.இ)

# ஊழல் எதிர்ப்புச் சட்டம் புத்தாண்டின் பின்னரே!

## நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

தமிழ் - சிங்களப் புத்தாண்டுக்குப் பின்னர் ஊழல் எதிர்ப்பு சட்டவரைவு நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நேற்று தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஊழல் ஒழிப்பு தொடர்பில் காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்பது சர்வதேச நாணய நிதியத்துடனான நிபந்தனைகளில் முக்கியமானது. இதற்கமையவே ஆசியாவிலேயே சிறந்த ஊழல் எதிர்ப்பு சட்டவரைவு கொண்டுவரப்படும் என ஜனாதிபதி அண்மையில் அறிவித்தார். தமிழ்-சிங்களப்புத்தாண்டுக்குப்பின்னர், நாடாளுமன்றம் கூடும் முதல் சந்தர்ப்பத்திலேயே நீதி அமைச்சரால் மேற்படி சட்டவரைவு முன்வைக்கப்படும். ஊழல் ஒழிப்பையே இளைஞர்கள் கோரினர், போராடினர். எனவே, அவர்களின் கோரிக்கையும் இதன்மூலம் நிறைவேறுகின்றது- என்றார். (அ-ஒ.44)


## சித்தராயர் வழிவந்த சித்தவைத்தியர் குணரத்தினம் முத்துப்பிள்ளை தம்பதிகள் பெற்றெடுத்த முத்துகள் அத்தனையும் சித்த வைத்தியரே!

100ஆவது அகவை (27.03.2023)



தோற்றம் 27.03.1923 மறைவு 10.04.2004

டாக்டர் திருமதி தெய்வானைப்பிள்ளை பூலோகசுந்தரம்

டாக்டர் திருமதி கந்தசாமி சிவக்கொழுந்து

டாக்டர் திருமதி செல்வத்துரை பொன்னம்மா (வைத்தியபூதி பாரம்பரிய வைத்தியர்)

டாக்டர் குணரத்தினம் செல்வத்துரை (ஓய்வுபெற்ற அதிபர், பிரபல வைத்தியர்)

டாக்டர் குணரத்தினம் சங்கரப்பிள்ளை (வைத்தியர்)

டாக்டர் குணரத்தினம் திருச்செல்வம் (வைத்தியர்)



Dr. பூலோகசுந்தரம் கயிலநாதன் D.A.M.S.(CEY)
"சகல்ராமிஷேக வைத்தியசூரி"
முன்னாள் முகாமையாளர்,
மாரானை ஈஸ்வர விநாயகர் சுழிபுரம்.

டாக்டர் செல்வத்துரை வரதரத்தினம்

டாக்டர் செல்வத்துரை இராசரத்தினம்

சுழிபுரம் மண் பெற்றெடுத்தபண்டிதமணியின்
வழிவந்த சங்கரதிலகமே
பாரம்பரியமானதன் மூதாதைகள் தந்த
- வைத்தியத்தை வளரவைத்தவரே
சித்தாயர் வழிவந்த சித்த வைத்தியத்தைசீர் பெறச்
- செய்த முத்துக்களில் ஒருவரே
குருத்துவத்தையும் மருத்துவத்தையும் ஒரு
- சேரமிளிர வைத்தவரே
தெய்வவழிபாட்டால் இறையன்பையும் சீர்
- குணத்தால் பிறர் அன்பையும் பெற்றசீராளனே
இத்தகையவிறப்பன்னர் எம்முடன் இன்றில்லையே
என்பதில் - ஏங்கித் தவிக்கின்றோம் ஐயா

**பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.**

**அன்றைய பொருளாதாரம் நெருக்கடி காலத்தில் கிராமத்தில் உள்ள (வீட்டுக்கு அருகில் உள்ள பாடசாலை) பாடசாலையில் பிள்ளைகளை கல்வி கற்று, மற்றும் கிராமத்தில் உள்ள மூலிகைகளை பயன்படுத்தினால் நாம் மிகமிக கொடியநோயில் இருந்து நீண்ட ஆயுளுடன்வாழ்ந்துகொள்ளலாம்.**

பற்பல ஆயிரக்கணக்கான பாடல்களில் மக்களின் உடல் நலத்திற்கான அரியகுறிப்புக்களை உள்ளடக்கியநம் முன்னோரான சித்தர் பெருமக்கள் ஓலைச் சுவடுகளில் எழுதிவைத்திருக்கிறார்கள். ஒருபாடலைப் பார்ப்போம்.

காலையின் இஞ்சிகடும்பகல் சுக்கு
மாலையில் கடுக்காய் மண்டலம் உண்ணி
கோலைஊன்றிக் குறுகிநடப்பவர்
குமரனாகிதலாவரதுப்பனே!

காலையில் வாதநாடிக்கு இஞ்சியும், பகலில் பித்தநாடிக்கு சுக்கும், மாலையில் சிலேத்துமநாடிக்குக் கடுக்காயும் நாளும் தவறாமல் உணவில் சேர்த்து உட்கொண்டு வந்தால் நோய்கள் நெருங்கா ஊன்றுகோலை கொண்டு நடக்கும் அளவுக்குத் தளர்ச்சியுடையவர்கள் கூட கோலை வீசித் தூர எறிந்துவிட்டு இளமைத் துடிப்புடன் நடைபோடுவார்கள் என்பதுபாடலின் கருத்தாகும். ராகி எனப்படும் கேழ்வரகு மிகுந்தசத்துள்ள ஒரு தானியம். இதைநாம் நாள்தோறும் உணவில் சேர்த்துக் கொள்வது மிகவும் நல்லது. வேப்பிலை கொழுந்து சிலவற்றை அன்றாடம் காலையில் மென்றுஉட்கொண்டு வந்தால் உடல் நலத்தைப் பற்றியகவலையே இல்லாமல் ஆரோக்கியமான நல்வாழ்வை பெறமுடியும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். தேன் - காலையில் சாப்பிட்டால் உடல் மெலியும். இரவில் சாப்பிட்டால் உடல் பருக்கும். எள் - எள்ளுடன் வெல்லம் சேர்த்து உருண்டைகளாகி உட்கொண்டுவந்தால் இளைத்த உடல் தேறும். இந்த எள்ளிலிருந்து எடுக்கப்படும் நல்லெண் ணெயைப் பயன்படுத்தினால பருமனான உடல் இளைக்கும். எள்ளுக்கும்.எண்ணெய்க்கும் வித்தியாசம் உண்டு. கொள்ளினைஉடலில் சேர்த்துக் கொண்டால் உடம்பு இளைக்கும். "இளைத்தவனுக்குஎள்ளும்,கொழுத்தவனுக்கும் கொள்ளும்"என்னும் பழமொழி இங்கேநோக்கத்தக்கது. "வேரகடலை (நிலக்கடலை) யைத் தோல் நீக்கி சாப்பிட்டால் பித்தம் மிகும். அதேவேரக் கடலைய பருப்பின தோலைநீக்காமல் உள்ளே இரு பருப்புகளுக்கிடையேயுள்ள மூக்கைமட்டும் நீக்கிவிட்டுசாப்பிட்டால பித்தத்தின் தொல்லை இராது. "இளநீரை,பொதுவாகஉணவுக்குமுன் சாப்பிட்டால பசிநீங்குவதல்லாமல் குன்மம் ஏற்படும். மாலையில் சாப்பிட்டால கிருமிகள் அகலும்".

"சாப்பிட்டபின்னர் இளநீரைச் சாப்பிட்டால் வாதம், பித்தம்,கோபம் தணியும்,பித்ரதோஷம் அகலும், மலம் தாராளமாகக் கழியும், நன்குபசிஏற்படும் நோய் நீங்கும். உடலில் பளபளப்புமிகும். வெப்பத்தினால் ஏற்படும் வயிற்றுப் போக்கிற்கு இளநீர் அருந்தினால் வயிற்றுப் போக்குபேதிநிற்கும். அதே இளநீரைவெறும் வயிற்றில் உணவிற்குமுன் துணியில் வடிகட்டிகுடித்தால் பேதியாகும்."

### வீட்டில் மூலிகைகள் வளர்ப்பதால் ஏற்படும் நன்மைகள்

- எமதுபாரம்பரியபாதுகாக்கப்பட்ட இனியநறுமணத்துடன் கூடியகாற்றோட்டம் கிடைக்கும். வீட்டுச் சூழல் தெய்வீகத் தன்மைபெறும் விஷ ஜந்துக்கள் வீட்டில் அணுகாது.
- வீட்டுச் சூழல் மிகஅழகாககாட்சியளிக்கும் மூலைகைத் தோட்டத்தில் உலாவிதோட்டத்தைஒழுங்கமைத்தல் நல்லபொழுதுபோக்காகஅமையும். இதனால் மனஅழுத்தங்கள் நீங்கிமனமகிழ்ச்சியும் ஏற்படும்.
- மூலிகைகளைசிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை இனம் காணக்கூடியதாக அமைவதுடன் மூலிகைகளின் வளர்ச்சிபற்றியகல்விஅறிவுவளர்ச்சிபெறும்.
- தினமும் விதவிதமான இயற்கையானசத்தான (கிருமிநாசினிகள் அடிக்காத) சமைத்து உண்ணக் கூடிய மூலிகைகளைஉணவில் சேர்த்துக் கொள்ளலாம். இதனால் நோய் இன்றிஆரோக்கியமாக வாழலாம்.
- விட்டுவருபவர்களுக்கும் கொடுத்து நல்லுறவை வளர்த்துக் கொள்ளலாம்.
- சாதாரணநோய்கள் ஏற்பட்டால் உடன் வட்டு மூலிகைகளைபறித்து இலைமருத்துவம் செய்துகுணமாகலாம்.
- இதனால் நோய்கள் உடன் குணமாகின்றது. வீண் அலைச்சல் தவிர்க்கப்படுகின்றது. நேரமும் பணமும் மீதியாகின்றது. (சிலநோய்களுக்கு உடன் வைத்திய சாலைக்கு சென்று மருத்துவ ஆலோசனைகளை பெறுதல் வேண்டும்.)
- இடவசதிக்குஏற்றவாறு மூலிகைகளை வளர்த்து விற்றுபணம் சேர்த்துக் கொள்ளலாம்..

### மூலிகைகளின் சிறப்புகள்:-

- "அறிவுக் கனியாகும் வாழைக்கனி"
மிக இலகுவாகவும் மலிவாகவும் கிடைக்கும் வாழைப்பழம்.நம் உடலுக்குநல்லபோஷணையைத் தரும். அதனால் அறிவுவளர்ச்சிக்குஏற்றது.
- "அளவுக்குமிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும்"
அதிகவிருப்பமானஉணவு என்றாலும், சுகமாக்கும் மருந்து என்றாலும், விரும்பியசெயல் எதுவென்றாலும் அளவுக்குமிகதியாகப் போனல் அதுஅமிர்தமாக இருக்காது. நஞ்சாகமாறிவிடும்.
- "வல்லாரைஉண்டால் வல்லாரைவெல்லலாம்"
வல்லாரை என்ற மூலிகையைஉணவுடன் சேர்த்து உண்பதனால் ஞாபகசக்தி அதிகரிப்பதுடன், உடற் பலமும் அதிகரிக்கும். இதனால் வலிமையுள்ள வனைவெல்லலாம்.
- "பெருங்காயம் இல்லா உணவும் பெரியோர் இல்லா வீடும் ஆகாது"
வீட்டில் பெரியோர் இருப்பது எவ்வளவுமுக்கியமோ அதுபோல உணவில் பெருங்காயமும் கூடுதலாக சேர்க்கவேண்டும். வாய்வை அகற்றி ஜீரணத்தைக் கூட்டும்.
- "சுக்கைப் போல் மருந்தில்லைசுப்ரமணியம் போல் தெய்வமில்லை"
கருணை வள்ளலான சுப்ரமணியக்கடவுள் எம்மைக் காப்பதுபோல், மருந்துகளில் சுக்கு இல்லாமல் செய்வதுமில்லை. சுக்குதேநீர் குடித்தல் நல்லது
- "பத்துமிளகிருந்தால் பகைவன் வீட்டிலும் உண்ணலாம்"
பகைவன் வீட்டில் உண்பதனால் ஏதாவது நச்சுத் தன்மையிருந்தாலும் பத்துமிளவு விகூழ்த்தைப் போக்கும். அதனால் எமதுஉணவிலும் மிளகு சேர்ப்பதனால் அதிலுள்ள நச்சினைப் போக்கும்.
- "ஆலும் வேலும் பல்லுக்குறுதி"
ஆலமரபட்டையும்,வேல் என்பது வேம்பு அல்லது வெள்வேல மரம். அதன் பட்டையும் பற்களுக்கு பாதுகாப்பு அளிக்கக்கூடியது
- "கறிவேப்பிலையோ வேப்பிலைகாய்கறிக்கெல்லாம் [illegible]"
காய்கறிகள்ல்லாவற்றையும் சமைக்கும் போதும் [illegible]
- "வாள்ளைஎறிந்தாலும் வாடிக் கீரையைஎறியாதே"
விலை கூடிய பொன்னை விட கீரை வகையானது, மதிப்பு கூடுதலானது. அதுஉண்பதால் உடலுக்கு அதிக போசணையைத் தரும்.

### எமக்கு உற்ற துணையார்?

எமக்கு உற்றதுணையாக இருப்பதுயார் என்றவுடன் மயக்கம் ஏற்படும். ஒருவர் சொல்லுவார் தந்தை,-தாய்,மனைவி,உறவினர்கள்,கடவுள் என்றநீண்ட-வரிசையில் ஒருவரைஒருவர் சொல்லிவிடலாம் எனபலர் நினைப்பர். ஆனால் ஆன்மீகசிந்தனையில் எமதுஉடம்புதான் எமக்குஉற்றதுணையாகநவீன-கருத்தாகும். எமக்குஉடல் ஆரோக்கியம் சிறப்பால் வாழ்ந்தால் நாம் நீண்டகாலமாகஉயிர் வாழமுடியும். இதனால் எமக்குஉற்றதுணைஉடம்பாகும். உடம்பு-உற்சாகமாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தால் எமது-உயிர நீண்டகாலமாகஉடம்பில் தங்கியிருக்கும்.

வைத்திய மேதைசித்தராஜர் வழியில் வந்த அமரர் குணரத்தினம் சங்கரப்பிள்ளைஅவர்களின் பேரன் ஆகிய கிருபாரத்தினம் துரைரத்தினம் (துவாரகன்) சித்தவைத்தியத் துறையிலும், விளையாட்டு துறையிலும் துடுப்பாட்டத்திலும் குறிப்பாக துடுப்பாட்டத்தில் மிக சிறந்த வீரனாக போன மாதம் மகாஜனாக் கல்லூரிக்கும் ஸ்கந்தா கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற "வீரர்களின் போர்" வருடாந்த போட்டியில், ஆறு விக்கெற்றுகளை வீழ்த்தியும், 50 ரன் அடித்து விக்கெற் அவுட்டாகாமல் விளையாட்டு சமநிலைக்கு கொண்டு வரப்பட்டது. இவரே காரணகர்த்தா ஆவார்.

அன்புள்ளங்களே! பாரம்பரியசித்தவைத்தியர் அமரர் சங்கரப்பிள்ளைஅவர்களினால செலவில்லாத இயற்கை மூலிகைமருத்துவக் குறிப்புகள் அடியேன் தங்களுக்குஅறியத் தருகிறேன். மற்றும் சகல விதமான நோய்களையும் தீர்க்கக் கூடியமருந்துகள் எம்மிடம் உள்ளது. முக்கியமான நாடிபார்ப்பதில் மேலே உள்ளவர்கள் எனக்கு கற்றுத்தந்தபடியால் நான் சுழிபுரத்தில் வாழ்ந்ததுபோல் சுன்னாகத்திலும் மிகச் சிறப்பாக வைத்திய சேவை செய்து வருகிறேன். பிள்ளைச் செல்வங்கள் இல்லாதவர்கள் கூட எமது மருத்து வசிகிச்சை மூலம் பலபேர் மிகவும் சந்தோசத்துடன் வாழ்கின்றார்கள்.

**Dr. செ.கிருபாரத்தினம்,**
**ஆயுள் வேத வைத்தியர்,**
**யா/ மயிலணி சைவ மகா வித்தியாலய அபிவிருத்தி சங்கச் செயலாளர்**
**முன்னாள் இந்தியா ஈழ எதிலியர் மாறு வாழ்வு கழகம்**
**நல்லாயன் ஆராய்ச்சி பொறுப்பாளர்.**
**சுன்னாகம் NSB Bank வீதி, உடையார் வளவு, சுன்னாகம்.**
**077 954 7589**

(CS 22515)(3/6)


## வெளிமாகாணத்தவர்...

செயலணியால் வெளி மாகாணங்களைச் சேர்ந்தவர்களை வடக்கு மாகாணத்தில் நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்த கருத்து தொடர்பிலேயே ஆளுநர் மேற்கண்டவாறு கூறினார்.

'வடக்கு மாகாணத்தில் உள்ள அரச வேலை வாய்ப்புக்களில் வடக்கு மாகாணங்களைச் சார்ந்தவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும். நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்த கருத்து தொடர்பில் அரச உயர் மட்டங்களில் முடிவுகள் ஏதும் எடுக்கப்படவில்லை. வடக்கு மாகாணங்களில் இடம்பெறும் அரச வேலைவாய்ப்புக்களில் வெளி மாகாணங்கள் சார்ந்தவர்களை அனுமதிக்கமுடியாது. மாகாணத்தில் உள்ளவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும்' - என்றார்.

இதேவேளை- வடக்கிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு வெளி மாகாணத்தவர்களை நியமிப்பதற்கான கோரிக்கை கடிதம் வடக்கு மாகாண பிரதம செயலர் அலுவலகத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெடுக்குநாறிமலையில்...

விக்கிரகங்களும் இடித்தழிக்கப்பட்ட செயற்பாட்டை நோக்கவேண்டியுள்ளது - இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

வெடுக்குநாறி ஆலய சிவலிங்கம் இடித்தழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் நேற்றுத் தகவல் வெளியானதும் அந்தப் பகுதிக்கு நேரில் சென்று, ஆலயப் பூசகர் மற்றும் நிர்வாகிகளுடன் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் கலந்துரையாடினார். இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தமிழர்களின் தாயகத்தை கபளீகரம் செய்து பௌத்த மயமாக்கும் திட்டத்துக்காகவே வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரரிலும் கைவைத்துள்ளார்கள். வெடுக்குநாறி மலையில் புத்தரைக் குடியேற்றுவதற்காகவே அவர்கள் இவ்வாறு செய்துள்ளார்கள். தங்களது இந்தத் திட்டத்துக்கு இடையூறாகவுள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத் தினருக்கு பல தொந்தரவுகளைக் கடந்த காலத்தில் தொல்பொருள் திணைக்களம் மற்றும் பொலிஸார் ஊடாகப் பிரயோகித்துள்ளனர்.


வடக்கில் ஏதாவது ஒரு மூலையில் அரச மரம் முளைத்தால் காணும். அங்கு ஓடோடி வந்து புத்தர் சிலையை வைப்பார்கள். பின்னர் ஏதாவது கதைகளைக் கூறி அங்கு விகாரையை அமைப்பார்கள். இதற்கு தொல்பொருள் திணைக்களமும் பாதுகாப்புத் தரப்பினரும் உடந்தையாக இருப்பார்கள்.

இப்போது ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தை ஆக்கிரமிக்க திட்டமிட்டு காய்களை நகர்த்தியுள்ளார்கள். ஆலயத்தின் பூசகரை நேரில் சந்தித்தபோது, தான் 5 ஆவது தலைமுறை பூசகர் என்று கூறுகிறார். எவ்வளவு பழமை வாய்ந்த ஆலயத்தை இடித்தழித்து ஆக்கிரமிக்க முயல்கிறார்கள்?

பௌத்த மயமாக்கலை எதிர்க்கவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கூறுகின்றார்கள். அதற்கு நான் முழுமையான ஆதரவு வழங்குவேன். அவர்களுடன் இணைந்து போராடத்தயாராக இருக்கின்றேன். பிடுங்கப்பட்ட சிவலிங்கம் மீண்டும் பிரதிஷ்டை செய்யப்பட வேண்டும் - என்றார். (அ-ஓ-125)

## ஆதிலிங்கேஸ்வரர்...

வெடுக்குநாறி மலையில் ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தை கடந்த 4 தலைமுறைகளாக அந்தப் பகுதி மக்கள் வழிபட்டு வருகின்றனர். போர்க் காலத்தில் வழிபாடுகள் தடைப்பட்டிருந்தது. போர் முடிவுற்ற பின்னர்



தொடர்ச்சியாக வழிபாடுகள் நடத்தி வருகின்றனர். தொல்லியல் திணைக்களம், வெடுக்குநாறி மலையை அபகரிக்கும் நோக்குடன் அங்கு பௌத்த துறவியின் மடலாயம் இருந்ததாகத் தெரிவித்து அதை ஆக்கிரமிக்க முனைப்புக்காட்டியது. அந்தப் பகுதி தொல்லியல் திணைக்களத்தின் ஆளுகைக்குட்பட்டது என்பதைத் தெரிவித்து, ஆதிலிங்கேஸ்வரர் ஆலய வழிபாட்டுக்குச் சென்ற பூசகர் மற்றும் ஆலய நிர்வாகிகளுக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டது.

தொல்லியல் திணைக்களத்தின் முறைப்பாட்டுக்கு அமைவாக நெடுங்கேணி பொலிஸாரால் பூசகர் மற்றும் ஆலய நிர்வாகிகள் கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் கடந்த ஆண்டு வவுனியா நீதிமன்றால் விடுவிக்கப்பட்டனர். அதன் பின்னர் ஆலயப் பூசைகள் எவையும் நடைபெறவில்லை. பூசகர் மற்றும் நிர்வாகிகள் தவிர்ந்த ஏனைய ஊர் மக்கள் ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகள் நடத்தினர்.

5 நாள்களுக்கு முன்னரும் அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் அங்கு சென்று வழிபட்டுள்ளனர். அப்போதும் சிவலிங்கம் உள்ளிட்ட ஏனைய விக்கிரகங்களும் அங்கு காணப்பட்டன. இந்த நிலையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் நேற்று வழிபடச் சென்றுள்ளார். மலை உச்சியில் இருந்த சிவலிங்கம் உள்ளிட்ட ஏனைய விக்கிரகங்கள் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் ஆலயப் பூசகர் மற்றும் நிர்வாகிகளுக்கு அவர் தெரியப்படுத்தியுள்ளார். அதனையடுத்து ஆலயப் பூசகர் மற்றும் நிர்வாகிகள் அங்கு சென்று நேரில் பார்வையிட்டுள்ளனர்.

'சிவலிங்கத்தை உடைத்து எடுத்து அருகிலுள்ள பற்றைக்குள் வீசியுள்ளனர். அம்மன் சிலையின் தலையை எடுத்துச் சென்றுள்ளனர். வைரவர் சூலம் பிடுங்கி வெறியப்பட்டுள்ளது. பிள்ளையார் சிலையையும் காணவில்லை. 6 மாதங்களுக்கு முன்னரும் அங்கிருந்து சூலத்தை யாரோ எடுத்துச் சென்றிருந்தார்கள். இப்போது ஆலயத்தையே இல்லாமல் செய்யும்நோக்குடன் எல்லாவற்றையும் இல்லாமலாக்கியுள்ளார்கள். நீதிமன்ற வழக்கு விவகாரம் காரணமாக 3 ஆண்டுகளுக்கு மேலாக அங்கு பூசை எதுவும் செய்யவில்லை' என்று ஆலய பூசகர் தம்பிராசா மதிமுகராசா 'உதயன் பத்திரிகையிடம்' தெரிவித்தார்.

3 நாள்களுக்கு முன்னர் நொச்சிமோட்டை பிரதான வீதியூடாக ஜீப் ஒன்றில் 6 பேர் வரையில், வெடுக்குநாறி ஆலயம் அமைந்துள்ள பகுதியை நோக்கிச் சென்றுள்ளனர். ஜீப் அவர்களை இறக்கிய பின்னர் திரும்பிச் சென்றதையும் அந்தப் பகுதி மக்கள் கண்டுள்ளனர். சில மணி நேரங்களின் பின்னர் வெடுக்குநாறி ஆலயக் காட்டுப்பகுதிக்குள் இருந்து சுமார் 6 பேர் பிரதான வீதி வழியாக நடந்து சென்றதை, மீன்பிடிக்கச் சென்ற சிலர் கண்டுள்ளனர்.

இதேவேளை - இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸாரோ, தொல்லியல் திணைக்களமோ இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஓ,ச,5,110)

## காங்கேசன் -...

படகுச் சேவை அடுத்த மாதம் 29ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என்று துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

காரைக்காலிலிருந்து ஏப்ரல் 29ஆம் திகதி புறப்படும் முதலாவது கப்பல் காங்கேசன்துறையை வந்தடையும். இந்தப் பயணம் 4 மணிநேரமாக இருக்கும். ஒரே தடவையில் 150 பேர் பயணிக்க முடியும். தற்போதைக்கு நாள் ஒன்றுக்கு ஒரு சேவையே நடத்தப்படும். பயணிக்கான ஒரு வழிக்கட்டணமாக 50 அமெரிக்க டொலர் அறவிடப்படும். ஒருவர் 100 கிலோ பொதியை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவார் - என்று நிமல் சிறிபால டி சில்வா குறிப்பிட்டுள்ளார். (அ-ஓ,5)


## பொருள்களின்...

பொருள்கள் மற்றும் பிற இறக்குமதிப் பொருள்களின் விலைகள் எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு விரைவில் குறைக்கப்படும் என வர்த்தகத்துறை அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் ரூபாவின் பெறுமதி அதிகரித்ததைத் தொடர்ந்து பல அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டன. பெரும்பான்மையான மக்கள் இறக்குமதி செய்யப்படும் பொருள்களைத் தான் கொள்வனவு செய்கின்றனர். டொலருடன் பரிவர்த்தனை செய்து இறக்குமதி செய்யப்படும் மற்ற அனைத்து அத்தியாவசியப் பொருள்களின் விலைகளும் விரைவில் குறையும். அதன் பயனை நுகர்வோர் பெறுவார்கள் - என்றார். (அ-ஓ,இ)

## பிடுங்கப்பட்ட...

எடுக்க வேண்டுமென சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன் கோரிக்கை விடுத்தார்.



வெடுக்குநாறி ஆதிசிவன் பிடுங்கி வீசப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, யாழ்ப்பாணம் இந்து கல்லூரி மைதானத்துக்கு அருகாமையில் நேற்றுமாலை இடம் பெற்ற கவனயீர்ப்புப் போராட்டத்தின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்துக்களின் புனிதத் தலங்கள் தொடர்ச்சியாக மத வெறியர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு வருகிறது. மட்டக்களப்பில் காளி கோயிலை இடித்து மீன் சந்தை அமைப்பேன் என முஸ்லிம் அரசியல்வாதி கூறிய போது அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. திருக்கேதீச்சர வளைவை கிறிஸ்தவர்கள் உடைத்த நிலையில் அரசு அதனை இன்னும் கட்டிக் கொடுக்கவில்லை.

அமைதியான சூழலை விரும்பும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம், பிடுங்கிய ஆதி சிவனை உரிய இடத்தில் பிரதிஷ்டை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.

கவனவீர்ப்புப் போராட்டத்தில் சிவசேனை தொண்டர்கள் உருத்திரசேனை அமைப்பின் தொண்டர்கள் முன்னாள் பிரதேசசபை உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். (அ-ஓ,20)

## வரி...

பந்தத்தின் ஒரு பகுதியாக விதிக்கப்பட்டுள்ள சில வரிகளை, அரசாங்கம் மறுஆய்வு செய்யக்கூடிய சாத்தியக்கூறுகளை சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த வெள்ளியன்று நடைபெற்ற மெய்நிகர் சந்திப்பு ஒன்றின்போது, சர்வதேச நாணயநிதிய அதிகாரிகள் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுக்கு இதைத் தெரிவித்துள்ளனர். சர்வதேச நாணய நிதியத்தின் ஏற்பாட்டில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

மெய்நிகர் சந்திப்பை நடத்துவதற்கு சர்வதேச நாணய நிதியம், ஆரம்பத்தில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம் மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் தொழிற்சங்கங்களை அணுகியது. இருப்பினும், மற்ற துறைகளைச் சேர்ந்த தொழிற்சங்கங்களும் கலந்துகொள்ளலாம் என்று அதிகாரிகள் பின்னர் தெளிவுபடுத்தியிருந்தனர்.

இந்தச் சந்திப்பின்போது சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள், தொழிற்சங்கங்களுக்கு இலங்கைக்கான அவர்களின் வேலைத்திட்டம் மற்றும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் நாடு எதிர்பார்க்கும் சீர்திருத்தங்கள் குறித்து விளக்கமளித்தனர். சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள், தங்களுக்கு நியாயமான பிரச்சினைகள் இருப்பதை ஏற்றுக்கொண்டதாகவும் தாம் சமர்ப்பித்த வரி முன்மொழிவுகள் ஆய்வு செய்யப்படும் என்று உறுதியளித்ததாகவும் தொழில் வல்லுநர்கள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (அ-ஓ,இ)

## வாகன...

வரும் மாதங்களில் நீக்கப்படும் என்று திறைசேரியின் மூத்த அதிகாரிகளை மேற்கோள்காட்டி 'சண்டே ரைம்ஸ்' ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

குறிப்பிட்ட பொருள்கள் மீதான இறக்குமதிக் கட்டுப்பாடுகளை அரசாங்கம் நீக்கும். இந்த நடவடிக்கை நாணய மாற்று விகிதம், அந்நியச் செலாவணிக் கையிருப்பு மற்றும் பணவீக்கம் என்பவற்றில் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தாது என திறைசேரி அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

மத்திய வங்கி, கைத்தொழில் அமைச்சு மற்றும் திறைசேரி என்பன கட்டுப்பாடுகள் நீக்கப்படும் பொருள்களின் அளவைத் தீர்மானிக்கும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர். குறிப்பிட்ட பொருள்கள் கறுப்புச் சந்தைகளில் விற்பனை செய்யப்படுவதைத் தடுப்பதற்காகவே இந்தத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளார்.

கணினிகள், கைத்தொலைபேசிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள், வீட்டு உபயோகப் பொருள்கள், எழுதுபொருள்கள், உணவுப் பொருள்கள், ஆடை உற்பத்திக்கான மூலப்பொருள்கள் மற்றும் ஆடைகள், தோல் பொருள்கள், அழகுசாதனப் பொருள்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள், உதிரிப்பாகங்கள், தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருள்கள், விவசாய உபகரணங்கள், குளியலறை பொருத்துதல்கள் மற்றும் பீங்கான் உள்ளிட்ட மின்னணு உபகரணங்கள், ரைல்ஸ் என 100 முதல் 150 பொருள்களின் இறக்குமதி கட்டுப்பாடுகள் அடுத்த நான்கு மாதங்களுக்குள் நீக்கப்படும்.

எனினும் வாகனங்களின் இறக்குமதி உடனடியாக அனுமதிக்கப்படாது. இன்னும் ஒன்றரை ஆண்டுகளுக்கு நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது - என திறைசேரி அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (அ-ஓ,இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்கலைக்கழகத்தில் களவு; பேரவையும் நடவடிக்கை

யாழ். பல்கலைக்கழக களஞ்சியசாலையில் இடம்பெற்ற மின்பொருள்கள் கையாடல் குறித்து பல்கலைக்கழக பேரவைக்கு துணைவேந்தரால் அறிக்கையிடப்பட்டுள்ளது. அதற்கு அமைவாக முறையான விசாரணையை மேற்கொள்ள பேரவை தீர்மானித்துள்ளது. பல்கலைக்கழக பேரவையின் கூட்டம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. இதன்போது களஞ்சியசாலையிலிருந்து 2 லட்சத்து 91 ஆயிரத்து 200 ரூபா பெறுமதியான 200 நில மாபிள்கள், 3 லட்சத்து 65 ஆயிரத்து 364 ரூபா பெறுமதியான 17 மின் இணைப்பு வயர்கள், ஒரு லட்சத்து 4 ஆயிரத்து 270 ரூபா பெறுமதியான 11 மின் இணைப்பு நிலவிசை (ஏர்த்) வயர்கள், 20 ஆயிரத்து 435 ரூபா பெறுமதியான 5 மெல்லிய மின் இணைப்பு வயர்கள் என மொத்தமாக 6 லட்சத்து 81 ஆயிரத்து 269 ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளதாக துணைவேந்தரால் பேரவைக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இதனையடுத்து பல்கலைக்கழக உள்ளக விசாரணையை ஆரம்பிக்குமாறு பேரவை பணித்துள்ளது. முறையான உள்ளக விசாரணையை ஆரம்பிப்பதற்கு ஏதுவாக, முதற்கட்ட விசாரணையில் சம்பவத்துடன் தொடர்புடையதாக அடையாளப்படுத்தப்பட்டவர்களை முறையான உள்ளக விசாரணை நிறைவடையும் வரையில் அரை மாதச் சம்பளத்துடன் இடைநிறுத்தவும் பேரவை பணித்துள்ளது.

இதேவேளை- பல்கலைக்கழகப் பராமரிப்புக் கிளையின் களஞ்சியசாலையில் இருந்து மின் இணைப்பு சாதனங்கள் மற்றும் கட்டப் பொருள்கள் நீண்ட காலமாகக் களவாடப்பட்டமை தொடர்பில் கோப்பாய் பொலிஸாரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். பராமரிப்புக் கிளையில் பணியாற்றும் அமைய ஊழியர்கள் சிலரே இந்தக் கையாடலில் ஈடுபட்டார்கள் என்று மேலதிகாரிகள் குற்றஞ்சாட்டி அது தொடர்பில் உள்ளக விசாரணைகளை மேற்கொண்டு, அவ் அமைய ஊழியர்கள் மீது பழியைப் போட்டு மூடி மறைக்க முயன்றபோதிலும், அந்த ஊழியர்களிடமிருந்து கிடைத்த தகவல்களின் அடிப்படையில் அதிகாரிகள் சிலரும் இந்தக் கையாடலுடன் தொடர்புபட்டிருப்பது தெரியவந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ,5)


### தேவை

விற்பனைப் பிரதிநிதி
MS Office தெரிந்தவர்கள்.

077 772 2215, 077 391 5630

### அறை வாடகைக்கு

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்கு அண்மையில் சகல வசதிகளுடன் கூடிய அறை தொழில் புரியும் பெண்களுக்கு வாடகைக்குக் கொடுக்கப்படும்.

076 419 2934, +65 9834 0600

### உடனடி வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம், கிளிநொச்சியில் இருக்கும் எமது நளின் நிறுவனத்தின் கிளைக்கான வேலைவாய்ப்பு

உதவியாளர்கள் (இருவர்-பெண்)
யாழ்ப்பாணம், கிளிநொச்சி

யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்ற இடங்களை வசிப்பிடமாகக் கொண்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதுடன், அனுபவமுள்ளவராகவும் இருத்தல் குறிப்பிடத்தக்கது.

பயிற்சிக் காலத்திற்குரிய வேதனம் வழங்கப்படும்.

மேலும் EPF, ETF வழங்கப்படும்.
தங்களது தகுதிக்கேற்ப வேதனம் வழங்கப்படும்.

தங்களது விண்ணப்பங்களை கீழ்க்காணும் முகவரிக்கு தபால் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கவும்.

தபால் மூலம்
194/2 பரமேஸ்வரா சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

NALIN Information Technologies (Pvt) Ltd
Email - info@nit.lk
Contact No - 077 542 7426

### தனியார் வகுப்பு (Personal Class)

க.பொ.த. உயர்தர (A/L) மாணவர்களுக்கான பௌதீகவியல், இரசாயனவியல், உயிரியல் ஆங்கிலம் மற்றும் தமிழ்மொழி மூலம் (English & Tamil Medium) வீட்டில் வந்து கற்பிக்கப்படும்.

தொடர்பு: 076 008 1283

### காணி விற்பனைக்கு

யாழ். நாவற்குழியில் 1 1/2 பரப்பு காணி விற்பனைக்கு.

- நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை ஐந்து இலட்சம் ரூபாய் மட்டும்
- A-09 வீதியில் இருந்து 300M தூரத்தில்
- லங்கா அசோக் லேலண்ட் வாகன விற்பனை நிலையத்திற்கு பின்புறம். 20 அடி பாதையுடன்

பார்வையிடும் நேரம்: காலை 8.00 மணிமுதல் மாலை 6 மணிவரை

கோல்டன் ரியல் எஸ்டேட் (Pvt) Ltd.
தொடர்பு: 076 436 5814
077 076 0389

(CS 225201)



உலகம் யாவையும் தாம் உளவாக்கலும்
நிலை பெறுத்தலும் நீக்கலும், நீங்கலா
அலகிலா விளையாட்டுடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே !

### ஸ்ரீ ராம நவமி

ஆராதனை விழா அழைப்பு
காலை - மாலை
21.03.2023 தொடக்கம் 30.03.2023 வரை

நிகழும் சுபகிருது வருஷம் பங்குனி மாதம் 16 ஆம் நாள் வியாழக்கிழமை (30.03.2023) ஸ்ரீ ராம நவமி திருநாளை முன்னிட்டு எமது ஆச்சிரமத்தில் 21.03.2023 தொடக்கம் 30.03.2023 வரையுள்ள 10 நாள்களும் காலை மாலை நாம சங்கீர்த்தனம், பஜனை, ஆராதனை வழிபாடுகள் நடைபெற திருவருளும் குருவருளும் கைகூடி உள்ளதால் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராக வருகை தந்து கலந்துகொண்டு திருவருள் பெற்று உய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பட்டாபிஷேக வைபவம் - 30.03.2023 - மாலை 7.00 மணியளவில் நடைபெறும்.

தினமும் மதியம் அன்னதானம், இரவு பிரசாதம் வழங்கப்படும்.

ஆயர்பாடி ஆழ்வார்கள் ஆச்சிரமம்
ஆயர்பாடி, மாவிட்டபுரம், தெல்லிப்பழை.

(cs.22506) (2.6)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 105 பரப்புக் காணி விற்பனைக்கு
மேட்டு நிலம் (நிலப்பரப்பு)




* யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர்ச் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் (காபற் வீதி) இருந்து 100 M தூரத்தில்.
* 15 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்.
* குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி.
* நன்னீர் ஊற்று நிலம்.
* ஒருபரப்பின் விலை (300,000/-) மூன்று இலட்சம் மற்றும் (200,000/-) இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்.
* விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த காணி.
* பருத்தித்துறை வீதியிலிருந்து 1 KM தூரம். சோமாஸ்கந்தா கல்லூரியில் இருந்து 1 KM தூரம்.
* பார்வையிடும் நேரம் :
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை.

Owner@Director.
T.Kalaithasan(Karan)

076 733 6047
076 333 6079
076 733 6093
Office No.:021 3155 900

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 22 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு:**

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- A-9 பிரதான வீதியில் இருந்து 700M தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 132 உள்ளன.
- 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- விலை 19 லட்சம் முதல் 15 லட்சம் வரை
- பார்வையிடும் நேரம்:
காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.
- தரகர் தேவையில்லை.

தொடர்புகளுக்கு:- ஜெயம்

077 814 7389
077 986 5457

(CS 22535) 1/6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.